தென்மொழி

பிடுங்கிய உரிமையை மீட்பது தவறு?

வெள்ளைக் காரனை விடுதலை கேட்டதும்
வெறிவட வரைநில விடுதலை கேட்பதும்
கொள்ளும் பொருளினில் ஒன்றுதான் என்பதைக்
குருடரும் செவிடரும் உணர்ந்திடல் வேண்டும்!
கொள்ளை யடிப்பவன் அண்டையன் எனினும்
குன்றுமலை,கடல் கடந்தவன் எனினும்
சள்ளையும் ஒன்றுதான்! சழக்கும் ஒன்றுதான்!
சரிநிகர் தமிழக விடுதலை சமைக்கவே!

கருமைப் பாடுளக் கன்னட வெறியன்
காவிரி நீர்தர மறுப்பதைக் கண்டும்,
எருமைப் பாடெனத் தில்லியில் இருப்போன்
எம்மின அழிவினைத் தடுத்திட முனையான்!
ஒருமைப் பாடென, ஒற்றுமை என்ன
உலுத்த வாயர்கள் உளறுவ தெல்லாம்
பெருமைப் பாடெனப் பேசுதல் சரியா?
பிடுங்கிய உரிமையை மீட்பது தவறு?

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 5

விலை:
உருபா: 3-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

O : 1479 : அன்புள்ள ஐயா, நலம்; நலமே யாகுக. தங்களின் உரைவீச்சு, (25—12—91 முதல் 29—12—91 வரை) சிதம்பரனார் மாவட்டத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன; அந்த விளைச்சலில் இருந்து மேலும் விதைகளைப் பொறுக்கி, மீண்டும் மீண்டும் பயிராக்க முனைந்துள்ளோம்; அன்புடன்

புலவர்; வே. தமிழ்மாறன். அம்மன்புரம்.

O : 1480 : அன்புமிக்க ஐயா வணக்கம், திருச்செந்தூர் சுற்றுச் செலவும் ஆற்றிய பேருரைகளும், மக்களுக்குப் பயன்பட்டுச் சிந்திக்கும் திறனையும் அவை ஊட்டியதைக் கண்ணாலும், காதாலும் அறிய முடிந்தது. உங்களுடைய அறிவின் ஊற்றுகள் வீணாகப் போய் விடாமல் இருக்க இப்படிப்பட்ட ஏற்பாடுகளை உ.த.மு.க. அன்பர்கள் செய்வார்களானால், நல்ல பயனை மக்களுக்கு வழங்கி, நிமிர வைக்க முடியும். அன்பர்களைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டுமே! மக்கள் மீதும் இந்நாட்டின் மீதும் பற்றுடையவர்கள் இதனைச் செய்தால், அவர்கள் இந்நாட்டுக்குச் சிறந்த தொண்டைச் செய்தவர்களாவார்கள்.

மக்கள் அறிஞர்களின் கருத்துகளை கேட்காமல்—அறியாமல்—போனதால் தான் இந்நாட்டு மக்கள் இன்னும் அறியாமையிலேயே இருக்கிறார்கள். ஏனைய நாடுகளை விட இந்த நாட்டின் சமயங்களால் மக்கள் அடிமையாகவும், உணர்வற்ற மண்சுவர்களாகவும் இருக்கிறார்கள். நாம் தாம் பார்த்தோமே! எவ்வகைப் பயனும் அற்ற ஐயப்பன் கோவிலுக்குப் பெண்களும் ஆண்களும் செல்வதற்காக அங்கு கூத்தாடிக் கொண்டிருப்பதை. இந்த மக்களை இப்படியே விட்டு விடுவது நம் போன்ற—மக்கள் மீது அக்கறை கொண்டவர்களுக்கு—கூடாத செயலாகும். எப்படியும் முப்படி இவர்களை உயர்த்திட வேண்டும்.

அதற்குத் தங்கள் பேருரை மிக மிகப் பயனை அள்ளித் தரும். அன்பர்கள் துணிவாக இறங்கி உங்களுடைய பேருரைகளை மக்கள் செவிமடுக்க வைப்பது நல்லது. அப்படிச் செய்பவர்கள் இந்நாட்டிற்கு நலம் செய்த நன்மையான தொண்டர்களாவார். திருச்செந்தூர் அன்பர் திரு. முருகேசன், திரு. தமிழ்மாறன் ஆகியவர்களை மக்கள் மறக்க மாட்டார்கள். நன்கு நினைவு வைத்துக் கொள்வார்கள். உலகத்தில் அவர்களை நினைப்பவர் இல்லாவிடினும், அவர்களுடைய ஊர்களிலாவது மனத்தால் நினைத்து மகிழ்வார்கள். போற்றுவார்கள். அவர்கள் தொண்டு தொடரும்படி நான் அவர்களுக்கு மடலும் எழுதியிருக்கிறேன்.

அடுத்து இயக்கத்தை வலுப்படுத்த முயற்சி எடுக்க வேண்டுகிறேன். மக்களிடத்தில் ஆய்ந்த தங்களுடைய கருத்துகள் கட்டாயம் உய்வை வழங்கும். மக்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய மிகச் சிறந்த தொண்டாகும். பொது மக்களிடம் நீங்கள் பேசுவது, சிறந்த பயனைத்தரும் என நான் கருதுகிறேன். முழுமையாக நம்புகிறேன். வணக்கம். தங்கள் அன்புள்ள

—அதியமான், தாழையூற்று, க.பொ.மா.வ.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இம் மாதச் சிறப்பு மடல்!

தமிழின உரிமைக் காவலர் மானமிகு வீரமணி அவர்களைத் தரமிழந்து குற்றஞ்சாட்டுவதா?

பெருமதிப்பிற்குரிய அய்யா பாவலரேறு அவர்கட்கு, வணக்கம்! தாங்கள் பேரன்புடன் அனுப்பிய நான்கு ஓலைகளும் கிடைக்கப்பெற்று, பன்முறை படித்துப் பல்வகை உணர்ச்சிகட்கு இலக்கானேன்.

தங்களின் தொண்டு சிறந்து, நிலைத்த புகழ் தாங்கள் மேவ வேண்டும் என விழைபவன் நான் ''சங்கப் புலவர்கட்கு நிகரானவர் நம் பாவலரேறு'' என அனைவரிடமும் குறிப்பிடுபவன் நான்.

அத்தகைய தாங்கள், ''ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால் செல்லும்வாய் நோக்கிச் செயல்'' என்றபடி, இன்ப நாட்டம் எதுவுமின்றி, இனத் தொண்டுக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்டு விட்ட தமிழின உரிமைக் காவலர் மானமிகு வீரமணியவர்களைத் தக்க சான்றுகளின்றித் தரமிழந்து குற்றஞ் சாட்டி எழுதியிருந்தாலும் (சுவடி 26:ஓலை:3), 23-12-91 அன்று பெரியார் திடலில் நடந்த தந்தை பெரியாரின் நினைவு நாள் நிகழ்ச்சியின்போது, என்னுடைய உரையில் அதே திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் முன்னிலையில் தங்களின் 'சாவப் பாடல்' பற்றி விம்மிதமும் பெருமிதமும் பொங்க நான் குறிப்பிட்டதை, எவ்வகை முகச் சுளிப்புமின்றி அவர் ஏற்றாரே யன்றி, எதிர்ப்புக் காட்டினாரல்லர். அந்த அளவுக்கு அவர் நாகரிக உணர்வு படைத்தவர்!

இன்னுஞ் சொல்லுவேன்: ''ஆய்வுக் கட்டுரைகளை பெருஞ்சித்திரனார், போன்று. பகுப்பு—தொகுப்பு முறையில் திட்டமிட்டு வேறெவரும் வரைவதில்லை. அவரின் ஆய்வு முறை தனிச் சிறப்பு வாய்ந்தது'' என்பதாகத் தங்களின் ஆற்றலினைப் பிறரிடம் பாராட்டிப் பேசும் பண்பாளர்தாம் தோழர் வீரமணி.

மதுரையில் ம.கோ.இரா. நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின் போது தங்கட்குக் கொடுமை இழைக்கப்பட்ட செய்தியறிந்து ''தளபதி(!)'' எனத் தங்களால் எள்ளப்படும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் எவ்வாறெல்லாம், துடித்துப் பதைத்தார் என்பதை அவருடன் அணுக்கமாய்ப் பழகி வரும் யான் நன்கறிவேன்.

மேலும், தங்களின் பகடிக்கு ஆளாகியிருக்கும் அவரின் மேலாண்மையிலும் மேற்பார்வையிலும் நடைபெறும் பெரியாரியல் (அஞ்சல் வழிக்) கல்லூரி முதல்வர் பெரும்புலவர் நா. இராமநாதனார் தமது பாடல்களில் தங்கட்குச் சீர்த்தி கூட்டும் வகையில் புகழ்ந்துரைத்து வருவதையும் தாங்கள் அறிவீர்கள்.

எனவே அய்யா, இன்றைய அரசியல் தட்ப—வெட்ப நிலைகளை நன்கு கருதி, பாழ் செய்யும் காழ்ச்சிந்தைக்கெல்லாம் இடந் தராது, எது வேற்றுமையை வளர்க்குமோ அதனை உதறியெறிந்து

விட்டு, எது ஒற்றுமையை உருவாக்கி நிலைப்படுத்துமோ அதனைப் பற்றுக்கோடாக்கிக் கொண்டு, நம் தமிழினச் சான்றோர் ஒன்றிணைய வேண்டுமென்பதே என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழ்த் தொண்டர்களின் பேரவா. இதில் பிழை புரி-கின்ற எவரையும் வருங்காலத் தலைமுறையினர் குற்றஞ்சாட்டிப் பழிக்கவே செய்வர். நந்தமிழரிடைப் பிளவு இயற்றிப் பகைமை புகட்டும் குழுக்களின் எண்ணிக்கை குறையாதா என ஏக்கத்துடன் பலரும் நெட்டுயிர்க்கும் நிலையில், தாங்கள் வழிகாட்டல் செய்து வரலாற்றின் போற்றுதலுக்கு உரியராக வேண்டும். "அவன்தான் தமிழின வீரன்" —பாடல் அருமை! தங்களின் அன்பு மறவா.
—பெரியார் பேருரையாளர், அ. இறையன், சென்னை-9.

தக்கார் தகவிலர் என்ப(து) அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

வணக்கத்திற்குரிய ஒரே தமிழினக் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தென்மொழி சுவடி : 26 — ஓலை : 4 கண்டோம். எங்கள் அன்புத் தந்தை "கோபி அரசு" மறைவு குறித்த செய்தி, உண்மையிலுமே ஆறுதலாக இருக்கிறது. அவர் வாழ் நாள்களில், 'அய்யா' 'அய்யா' என்று தங்களைப் பற்றி மட்டும் தான் நாளும் நாளும் எண்ணி, வாழ்ந்து வந்தார். அவரை ஒவ்வொரு முறை பாராட்டும் போதெல்லாம் (அவர்—எங்கள் குடும்பத்தைத்) "தென்மொழிக் குடும்பம்" என்று தான் பெருமையாக ஏற்றுக் கொள்வார். அவரது முப்பது ஆண்டுக்கால மக்கள் பணிக்கு முழுமையான விதையாக, விழுதாக இருந்தவர் "அய்யா பாவலரேறு" மட்டுமே என்பது அவரை ஒட்டியிருந்தவர்களுக்கு மட்டுமே தெரியும். அவரது பையில் பெருஞ்சித்திரனாரின் எழுத்துகள் இல்லாத நாட்களே இல்லை. உள்ளத்தில் அய்யாவின் சிந்தனையும், அன்பும் என்றும் குறைந்ததே இல்லை. பாவலரேறு அவர்களைப் பற்றிப் பலரிடம் பேசும் போது அவர் முகத்தில் விரிந்த புன்னகையை இனியென்று காண்போம்? மறக்கவே முடியாது!

தென்மொழியில் குறிப்பிட்டுள்ள "அவர் ஆசிரியராக நின்று பயிற்றுவித்த — வளர்த்தெடுத்த — மாணவ நெஞ்சங்கட்கும்" என்ற வரி, இங்கு பல நல்ல உள்ளங்களுக்கு ஆறுதலாக இருக்-கிறது. எமக்கு எழுதிய மடலில் தாங்கள் சுட்டியுள்ள அவருடைய மக்கட் செல்வங்களாகிய நாங்கள், அவரது பாதையில் பயணம் செய்கிறோம், தமிழின் விடுதலைக்காக!

அய்யா!... தொடர்ந்து தொடர்பு கொள்வோம்! அம்மா நன்றியினைத் தெரிவிக்கிறார். நன்றி! என்றும் உங்கள் அன்பை நாடும், — தேவநேயன், தமிழரசு, அ. மறையரசு,
கோபிபாளையம்.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

(திருவளம் தி. பி. 1990 (1959))

தென்மொழி
மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை நாம் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26] தி.பி. உ0உ௩ — கும்பம் (மார்ச் 92) [ஓலை:5)

(சு : 25 ; ஓ : 10 -இன் தொடர்ச்சி)

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-6.

செஞ்சொற் கதிரவன், சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின் சீரிய மொழித்திறனைத் தமிழுலகம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான மொழிக் கூறுகளையெல்லாம், நன்குணர்ந்து, அவற்றுடன் இற்றை மேலை-நாட்டு அகராதிச் செய்முறைகளையும் சிறப்-பாக அறிந்த இலக்கிய இலக்கணத்திறன்மிகு பெரும் பேராசிரியர் ஒருவரால்தான், தமிழ் மொழியில் ஏதாம் ஒரு துறையகராதியை ஒருவாறு செப்பமாகத் தொகுத்துக் காட்டற்கியலும்;

இவ் வகராதி ஆக்கத்தைப் பற்றி விரிவாக எழுதப் புகு முன், முன்குறித்த வரலாற்றுக் கருத்துரைப் பகுதியில், சுட்டுதற்கு விடுபட்டுப் போன ஒரு நூலைப் பற்றியும் சில கருத்துகளைக் கூறி அதை நிறைவு படுத்திவிட விரும்புகிறோம்.

நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மதுரைப் புலவர் உயர்திரு இளங்குமரனுர் அவர்கள் அண்மையில் எழுதி, சிதம்பரம், மணிவாசகர் நூலகம் வழி, பெருமைமிகு பண்டாரகர் ச. மெய்யப்பனுர் அவர்கள் வெளியிட்ட 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் வரலாற்று நூலையும் மிக அண்மையில் பார்க்க நேர்ந்தது: படிக்கவும் நேர்ந்தது.

அஃது ஒரு 'வரலாற்று நூல்' என்னும் புறக் குறிப்பின்றியே ஓர் இயக்கத்தின் வரலாற்றைக் கூறும் நூலாக வெளிவந்துள்ளது: ஒரு வேளை வரலாறு என்று குறிப்பிடின், முழுமை வரலாறும் இஃது என்று பொருளாகி விடுமோ என்னும் தயக்கத்தில் இவ்வாறு அக்குறிப்பின்றியே, இயன்ற வரை அவ்வியக்கம் பற்றிய சில நிகழ்ச்சிக் குறிப்புகளாக இருக்கட்டும் என்ற அளவில், அந்நூல் எழுதப் பெற்றிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. அக் கருத்துக்கேற்பவே, அல்லது அக் கருத்து சரியே என்று முடிவு கட்டும் அளவிற்கே அந் நூற் பொருளும் உள்ளது.

தனித்தமிழ் இயக்கத்தின் தொடக்க முயற்சிகள் படிநிலை வளர்ச்சியாக அந்நூலின் முன்மைப் பகுதிகளில் ஓரளவு விளக்கமாகவும் அளாவியும் எடுத்துக் கூறப் பெற்றிருப்பது முதற்கண் பாராட்டத் தக்கது. ஆனுல் மறைமலையடிகள் முயற்சி தொடங்கி எழுதப் பெறும் வரலாற்று நிகழ்ச்சிகள், பெரும்பாலும் நூலாசிரியர் வாழ்கின்ற காலத்தவை ஆகலானும், அந் நிகழ்ச்சிகள் தொடர்புடையார் அவர் பார்த்தும் பாராதும், பழகியும் பழகாதும் அமைந்தவர் ஆகலானும், அவரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, மிகைத்தும் குறைத்தும், தூக்கியும் தாழ்த்தியும், நிறைத்தும் மறைத்தும், எழுதப் பெற்றுள்ளன என்பதை, அவ் வரலாற்று நிகழ்ச்சிகளை அறிந்தோரும், அவற்றுள் செறிந்தோரும் கட்டாயம் உணரவே செய்வர். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு கூறுவோம்.

பேரா. முனைவர் ச. மெய்யப்பன் அவர்களின் 'தனித்தமிழ் இயக்க ஆவண' உரையுள், ''அதிலும் சிறப்பாக 1967-இல் கழக ஆட்சி அமைந்த பின் எங்கும் தனித்தமிழ், எதிலும் தனித்தமிழ் என்னும் கொள்கை செயல்படத் தொடங்கிற்று'' என்று அவர் கூறும் கருத்து, திரவிடத் தமிழையே தனித்தமிழ் என்று நாம் ஒப்புக் கொண்டாலன்றி, தவறுனதென்றும் மிகைப்படுத்திக் கூறப்பெற்றதென்றும் தானே நாம் மதிப்பிடற்கியலும்? வெண்ணெயே நெய் என்று கூறுவதற்குத் தகும் என்றால், பாலையும் ஏன் அவ்வாறு கூறுதல் கூடாது?

1959 - இல் தென்னார்க்காடு மாவட்ட, நெல்லிக்குப்பத்தில், தென்மொழி என்னும் இவ்விதழ் நான்கணு விலையில், தூய தனித்தமிழ் வளர்ச்சிக்கென்றே, ஆரவாரமின்றி எளிய முறையில் தோன்றி, 1967-க்குள் மாதம் மூவாயிரம் முதல் நான்காயிரம் படிகள் வரை, உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் உறுப்பாண்மை-

யும் முகவாண்மையும் கொண்டு, தனித்தமிழை மக்களுக்கிடையிலும் மாணவர்க்கிடையிலும் பரப்பியிருக்கவில்லையெனில், தனித்தமிழ் என்னும் சொல், மறைமலையடிகளார்க்கும், அவரின் திருமகளார் நீலாம்பிகை அம்மையார்க்கும் நிகழ்ந்த உரையாட்டில் மட்டுமே காணப்பெற்ற தொடக்க வரலாற்றுச் சொல்லாகவே இருந்திருக்கும். மற்று, அடிகளார்க்குத் தனித்தமிழுணர்வு கால் கொண்ட பின்னர், அவர் பெரிதின் முயன்று மீள உருவாக்கிய தனித்தமிழ் ஆக்க நூல்களும், எண்ணிக்கையில் வெறும் நூற்றுக்கும் உட்பட்ட படிகளே அச்சிடப் பெற்ற அவரின் 'ஞானசாகரம்' என்ற 'அறிவுக்கட'லும் தனித்தமிழ் என்னும் அன்றைய கற்பனை உணர்வை மீமிசைப் புலவர் குழாத்திடை மட்டுமே எழுப்பப் பயன்பட்டுதவின என்பதை வல்லுணர்வாலன்றி நல்லுணர்வால் எவரேனும் மறுப்பரோ? அதுபோலவே, மணிப்பிரவாளம் என்னும் கலவை நடையினின்றும் தமிழ் மீண்டு மணிபவள நடைக்கு ஆகி வந்து, முழுத்தமும் சமற்கிருதப் பிணி நீக்கிக் கொண்டு அறிவியலும் கலந்த தூய தனித்தமிழ் என்னும் மணித்தமிழ் நடைக்குத் தத்து நடையிட்டதே அது, தென்மொழி இதழின் தனி முதல் முழுமுயற்சியன்றோ? இதனை இத் தனித்தமிழ் இயக்க நூல் மூடி மறைப்பானேன்?

இந் நூலின் 16-ஆம் பகுதி முதல் 20-ஆம் பகுதி வரை குறிக்கப் பெறும் நிகழ்ச்சிகளும் கருத்துரைகளும் நூலாசிரியரின் முழு வெறுப்பு விருப்புகட்கு உட்பட்டு எழுதப் பெற்றனவாகவே உள. இவற்றுள் தென்மொழி பாவாணரை வெளிப்படுத்திய பாங்கும், பெரும் புலவர் பலரும் பிறரும் பாவாணரை நன்கு மதியாதிருந்த நிலையில், தென்மொழி அவரின் நின்ற ஒளியைப் புலமக்களுக்கும் பொது மக்களுக்கும் தொடர்ந்து புறப்படுத்திய முழுமுயற்சியும், அவரின் அகர முதலி அருங்கடனுக்காற்றிய பெருங்கடமைப் பீடும் இந்நூலில் நாக்கடிப்பாகவே ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக இறைக்கப் பெற்றுள்ளன. அவ்வளவோடன்றித் தமிழ் மீட்பு முயற்சியில் தென்மொழிக்கும், அதன் ஆசிரியரான இக் கட்டுரை ஆசிரியர்க்கும் பாவாணர் தம் ஓரிரு வரலாற்று நூல்களில் வேண்டா வெறுப்பாகத் தந்த பங்களிப்பையும் கூட, இந் நூலாசிரியர் அளிக்காத இவறல் தன்மை இவரின் பெருந்தகைமைக்கு இழுக்கு சேர்ப்பதாகாதோ?

இவரின் இத்தகைய இப் புறக்கணிப்புத் தன்மைக்கு, இந் நூலின் 20-ஆம் பகுதியான 'இதழ்வளம்' மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. இதில் பிற பொதுவான நற்றமிழ் இதழ்களையும் ஆர்வத்தான் விரைந்து தோன்றி விரைவின் மறைந்து பெயர் மட்டில் நிறுத்திய ஒரு சில சொற்றமிழ் இதழ்களையும் பொது நிலையில் எண் வைத்துக் கூறியது போலவே, தூய தமிழ்மொழி ஆக்கத்திற்காகப் பெரும் போர்க் களத்தையே அமைத்து, அதில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரையே போர்க்கள வேள்வி மறவராகவும், தானைத்தலைவராகவும் முன் நிறுத்திக் கடந்த முப்பத்து மூன்றாண்டுகளாக நடத்தப் பெற்று வரும் தென்மொழி-

யையும் போனும் போக்காக, மேனும் மினுக்காகக் கூறியிருப்பது, நேர்மையும், நிறைமையும் கொண்ட வரலாற்றுசிரியர் தம் சீர்மையாந் தகைமைக்கும் பொருந்துவதன்று ; புகழ்மைக்கும் உரிய தன்று ! இனி, அஃறிணைப் பொருளாகிய தென்மொழி-யினது தொண்டே கல்லுக்குள் ஈரமெனக் கசிவு காட்டப் பெறும் பொழுது, அதன் ஆசிரியராகிய உயர்திணையரையர் மனமுவந்து மாணப் பெருமையராகக் காட்டி விட உளங்கொண்டு விடுவார், இந்நூலாசிரியர் ? எங்கு தம் நல்லுரையாலும், உண்மையுரை-யாலும், பீடு வந்து அவர்க்குக் கூடி விடுமோ என்று பொத்தாம் பொதுவில், மிக எச்சரிக்கையாக, எழுத்தெண்ணிப் போட்டுப் பத்தோடு பதினொருவராகவே அவரை இந்நூலுள் கூறிவிட்டுப் போயிருக்கிறார், இவர்.

இவ்வாறான நிலைகள் தொகுத்துக் கூற முற்படின் இந் நூலுள் பெருகக் கிடைக்கும் என்றஞ்சியும், வரலாற்றாசிரியர்க்கு நடுநிலை வாயாவிடின், வரலாறு வழக்காறாகி, இழுக்காறாகக் குறுகி, இல்லாறாகி விடும் என்று, ஒரு சோற்று ஒருபதமாகக் காட்டுதற்கே இதுவும் கூறப்பெற்றதால் இவ்வளவில் சாலும் என்று கருதியும், இது முடித்துக் கொள்ளப் பெற்று அகராதித் தொடர்பான நம் கருத்துரைகள் சில இனி எடுத்துக் கூறப் பெறும் என்க.

மொழிஞாயிறு பாவாணர் ஆதி என்பதை வடசொல்லாகக் கொண்டதால், அகராதியை அகர முதலி என்று கூற முற்பட்டார். ஆதி என்னும் சொல்லைத் தூய தமிழ்ச் சொல்லாகவே காட்டி, அகராதி என்னும் சொல்லையும் தொடர் வழக்காக்கினார், அருளி, பாவாணர் மொழிஞாயிறு என்றால், அருளி செஞ்சொற் கதிரவன். மொழிக்கும் பாவாணர்க்கும் எத்துணை உறவுண்டோ, அத்துணை உறவு தீந்தமிழ்ச் சொல்லுக்கும் சொல்லாய்வறிஞர் அருளிக்கும் உண்டு. இது வெறும் உணர்வுரை அன்று ; மெய்யுணர்வுரையாகும். மொழிஞாயிறு என்னும் சொல்லும் பாவாணர்க்குத் தென்மொழி அற்றை வழங்கிய சொல்தான்; செஞ்சொற் கதிரவன் என்னும் புகழ்ப்பூந்துணரும், அருளியார்க்-குத் தென்மொழி இற்றை வழங்கிடும் சொல்தான் ! அஃது எவ்வளவு பொருத்தமோ, சரியோ, அவ்வளவில் இதுவும் பொருத்தமும் சரியுமாகும்.

எமக்கு உறவு உடல் தொடர்பானது என்பது எப்பொழுதோ அற்றுபோய், உள்ளத்தொடர்பானது, உணர்வுத்தொடர்-பானது, உயிர்த்தொடர்பானது என்றாகிய பின்னர்தான், பாவாணரை நாம் ஆசிரியன் என்பதினும் மிக்குயர்த்துத் தந்தை எனக் கொண்டோம். அதே போல் அருளியையும் ஒரு கொள்கை உறவோர் என்பதினும் மிக்கணுக்கிக், கொண்ட மருகர் என்று கண்டோம். அஃதாவது அருளியைக் கண்ட பின்னர்தாம் மருகரைக் கண்டோம். எனவே, இவ்வகையில் நாம் சுட்டும் அறிவுத்தகைக்கு நாம் கொடுத்த பெருமையை, வெறும் உறவுத்-

தகைக்கு நாம் கொடுத்துக் கொண்டதாக அவரின் அகப்புலமை காணாது. வெறும் புறப்புலமை கண்டோரே கூறுவர்.

இச் சொல்லாய்வறிஞர், செஞ்சொற்கதிரவன், ப. அருளியார் அவர்களின், அரும்பெறல் படைப்பு— அவர்தம் செந்தமிழ்ச் சீர்மைக்குச் செழுமை விளைநிலம். தூய்தமிழ்ப் பரப்பலுக்குத் தோன்றாத் துணை நலம்— ஆரியம் முதலாய வேற்றயல் மொழிகளால் நெருக்குண்டு, நெடுநலம் குன்றி, நிறை வளம் சிதைந்து நிற்கும், புரையிலாத் தமிழுக்குப் புது வலிவு என வரவிருக்கின்ற, அவரின்,

1. கலைச் சொல் அகரமுதலி
   முதல் மடலம் = ஆங்கிலம் — தமிழ்.
   இரண்டாம் மடலம் = தமிழ்—ஆங்கிலம்.
2. கலைச் சொல்லாக்க அகரமுதலி
   முதல் மடலம் = ஆங்கிலம்—தமிழ்.
   இரண்டாம் மடலம் = தமிழ்—ஆங்கிலம்.
3. தூயதமிழ் அகரமுதலி — ஐந்து மடலங்கள்.

இவை மூன்று அகரமுதலிகளும், சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களைத் திட்டத்துறைத் தலைவராகவும், முதன்மைப் பதிப்பாசிரியராகவும் கொண்டு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்து வருகின்ற அரும் பணியாகும்.

பாவாணருக்கு முன், சென்னைப் பல்கலைக் கழகம் பேரா. வையாபுரியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு செய்து முடித்த தமிழ்ச் சொற் களஞ்சியம் எனப்பெறும் Tamil Lexicon என்னும் பல்கலைக் கழகப் பேரகராதி, இருபத்தேழாண்டுக் காலத்தையும், பல இலக்க உருபாக்களையும் செலவாக்கிக் கொண்டு, தமிழ் மொழிக்கு ஓரளவு தானும் பயனற்ற அகரமுதலியாக வெளிப்படுத்தப் பெற்றது.

அரசுப் பணத்தையும், தமிழையும் தின்று பிழைக்கும் கூட்டம் இன்றைக்கும் கூட ஏனோதானோ என்னும் வகையிலேயே நந்தமிழ் மொழிக்கு உழைத்து வருவதை வெளிப்படையாகவே அறியலாம். முன்னால், திரைப்பட நடிகையும் இக்கால் தமிழக முதல்வரும் ஆகிய கற்பனைக் கவர்ச்சிச் செல்வி செயலலிதாவைத் தமிழ்த்தாய் என்றும், நாடக, திரைப்படக் கதை, உரையாடல் வல்லுநரும், முன்னாள் முதல்வரும் ஆகிய கருணாநிதியை முத்தமிழறிஞர் என்றும் அவரைப் பின்பற்றும் இலக்கக் கணக்கான கட்சி வெறித் தமிழர்களும், படித்த பணம், பதவி மோக அடிமைத்தமிழர்களும் கூறி மகிழும் போது, தமிழ்மொழி எவ்வகை அடையாளத்துடன் வளர்க்கப் பெறும் என்பதை உண்மை நடுநிலைத் தமிழறிஞர்கள் ஒருவாறு உய்த்துணர்ந்து கொள்வார்களாக!

(தொடரும்)

உடனே வாங்கிப் பயனடையுங்கள் !

பனப்பாக்கம் புரட்சிப் பாவேந்தர் பேரவையின் சிறந்த வெளியீடுகள்.

ஒலியிழைகள் (AUDIO TAPS)

1. **களத்தில் கேட்கும் கானங்கள்—**
(விடுதலைப் புலிகளின் பாடல்கள்; டி. எம். சவுந்தரராசன், பி. சுசீலா, வாணி செயராம், சித்ரா, இராசேசுவரி முதலியோர் பாடிய பத்துப் பாடல்கள். வரலாற்று முன்னுரையும் இனிய பின்னிசையும் கொண்டவை.) விலை : 30-00

2. **பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள்.**
(தேனிசைச் செல்லப்பா பாடியவை) விலை : 30-00

3. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் (முதல் பகுதி)**
('தமிழின வழிகாட்டிகள்' என்னும் வரலாற்று வரிசையில் முதல் வெளியீடாகப் பாவலரேறு அவர்களைப் பற்றி, சொல்லாய்வறிஞர், செஞ்சொற் கதிரவன் ப. அருளி அவர்களின் கருத்தாழமிக்க, திறனாய்வு எழுச்சியுரை.) விலை : 30-00

பதிவு அஞ்சல் செலவு தனியாக உரு 10-00

புரட்சிப் பாவேந்தர். பேரவை, பனப்பாக்கம் : 631 052.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்மொழி பிப்ரவரி மாத இதழ் கண்டேன். அதில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளும் பாராட்டிற்குரியவை; அதிலும் குறிப்பாக திரு. குணா அவர்கள் எழுதிய கட்டுரையினைக் கண்டேன். பெரு உவகை பூத்தேன். அவர் கூறியுள்ள கருத்துகள் அனைத்தும் முத்தானவை. ஏற்கனவே நம் தமிழினம் பார்ப்பனரால் நசுக்கப்பட்டுத் தற்போதுதான் அதற்கு ஓர்இடைவெளி ஏற்பட்டுள்ளது. ஆனால் தற்போது தமிழன் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் யாவும் அவனது எதிர்காலத்தினைக் கேள்விக்குறியாக்குகின்றன. வேற்று நாட்டில் நேற்று தமிழன் ஏதிலியாக்கப்பட்டான். ஆனால் இன்று நமது சொந்த நாட்டிலேயே ஆதரவற்றவனாக(அநாதையாக) ஆக்கப்பட்டான். அவனது அவல நிலையினைக் கண்டு (அவன் தாக்கங்களை) எதிர்ப்பதாகக் கருணாநிதி, செயலலிதா மற்றும் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் போராட்டம் என்ற பெயரில் வெறும் அறிக்கை, பேரணி என்ற போர்வையில் நாடகம் ஆடியதை இவ்வுலகம் அறியும். ஆனால் இவற்றால் தமிழன் நலம் பெற்றானா? இல்லையே. தமிழ் நாட்டில் வாழும் கன்னட மக்கள் வளமாக, தமிழனைச் சுரண்டி வாழ்வதைப் பார்க்கும் போது என் நெஞ்சு பதைக்கின்றது ! மேலும் திரு. குணா அவர்கள் கூறியபடி, தெலுங்கர்களும் சேர்ந்து நம் நாட்டை, நம் மக்களை இவற்றையெல்லாம் களைய முனையாத கருணாநிதி, தமிழர் தலைவரா ? இல்லை ; இல்லவே இல்லை ! ஆம், பெருஞ்சித்திரனார் அவர்களே தமிழர் தலைவர். அவர்கட்கு என் வணக்கங்கள்.—அ. கரிகாலன், கோடம்பாக்கம், சென்னை-24



நூறாசிரியம்

பெருஞ்சித்திரனார்

பாட்டு : ௯௯

மானமும் உயிரும் வாழ்வும் கருதி
வானமும் நிலமும் நீரும் கடந்து
கானமும் புகுந்து களத்தினும் நெரிந்து
தானும் குடும்பும் இனமும் இடர்ப்பட
ஆயிரம் ஆயிரம் இளையரும் பெண்டிரும்
மாய்வதும் திரிவதும் ஆகிய நிலைகொள்
ஈழத் தமிழர் இடையினில் தோன்றிக்
காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை—
தன்னையும் இழந்து தமரையும் இழந்த
அன்னைக் குலத்தோர் அறங்கூர் மறத்தி—
'தானு'வென் பெயரினள் தன்னினம் அழித்த
வீணனுக் கெதிரா வெகுண்ட வெஞ்சினம்
நெஞ்சினும் உயிரினும் நிலைத்த நினைவொடு
ஒருதனி நின்றே ஊர்நடு சிதைத்த
ஈக மன்றோ ஈகம்
ஆகுமோ உலகவள் அழிவிலாப் புகழ்க்கே !

பொழிப்பு : தன்னுடைய மானத்தையும் உயிரையும் வாழ்க்கையையும் காத்துக் கொள்ளக் கருதி, வானத்தையும் நிலத்தையும் நீரையும் கடந்து(வெளிநாடு ஏகியு)ம், (அவ்வாறு ஏகவியலாதவர்கள் அங்கேயே உள்ள) காடுகளில் புகுந்து(ஒளிந்து)ம், போராட்டக் களத்தில் (சிக்கிச்) சிதைந்தும் உயிரிழந்தும், அவரவரும், அவரவர் குடும்ப உறுப்பினர்களும், அவர்களின் இனமக்களும் இடர்கள் படுகின்ற, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்டிர்களும், மாண்டு போவதும், (ஊர் ஊராக, நாடு நாடாக ஏதிலிகளாகத்) திரிவதும் ஆகிய நிலைகளைக் கொண்டுள்ள ஈழத்தில் உள்ள தமிழர்களின் நடுவே பிறந்து தோன்றி, வயிரம் போன்ற (உறுதியான) நெஞ்சுடைய, கன்னிப் பருவத்தின் இளமை மொட்டுப் போன்றவளும், தன்னையும் (கற்பளவில்) இழந்தும், தன் குடும்பத்தினரையும் உறவினரையும் சாவளவில் இழந்தும் விட்ட—தாய்மைக் குலத்தில் தோன்றிய அறவுணர்வு கூர்தலுற்று மறவுணர்வாய் நின்ற மறத்தியும்-ஆகிய 'தானு' என்னும் பெயரை உடையவள், தன் இனமாகிய தமிழினத்தை அழித்து வரும் வீணன ஆட்சியைச் செய்தவனாகிய (இராசீவுக்கு) எதிராக, வெகுண்டெழுந்த (வெப்பம் மிகுந்த பழிவாங்கத்தக்க) கடுஞ்சினம் தன் நெஞ்சகத்திலும், உயிரிலும்

(கலந்து) நினைத்துவிட்ட மாறுத எண்ணத்தொடு, தான் ஒருத்தியே தனித்து நின்றுளாகி, ஊர் மக்களுக்கு நடுவில் அவனைச் சிதைத்-தழித்துத் தன்னையும் இழந்து நின்ற ஈகமன்றோ (மற்ற எல்லா நிலையிலும் பிறர் செய்த ஈகங்களை விடச் சிறந்த) ஈகமாகும்! இவ்வகையில் அவள் பெற்ற அழிவிலாத புகழ்க்கு இவ்வுலகமே ஈடு ஆகுமோ ? (ஆகாது என்க.)

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

தமிழீழத்தில் நிகழ்ந்து வருகின்ற விடுதலைப் போராட்டக் காலத்து இடையில் நிகழ்ந்த, இந்தியாவின் தலைமையமைச்சராக விருந்த இராசீவ் என்ற இந்திராவின் மகனும், சவகர்லால் நேருவின் பெயரனும், இலங்கைத் தமிழர்களினின்று தோன்றி, இராசீவ் இலங்கைக்கு அனுப்பிய அமைதிப் படை என்ற தமிழின அழிவுப் படையால் தாக்குண்ட தானு என்ற ஓர் இளம் பெண், தன் உடலிற் பிணித்த வெடிகுண்டுடன் நெருங்கி மோதி அழிக்க-வும் அழியவும் பட்ட, அளவிடற்கரிய ஈகச் சாவைப் போற்றிப் புகழ்ந்து கூறியதாகும் இப்பாடல்.

'தானு' என்னும் பெயரினள், தன்னினம் அழித்த வீணனாகிய இராசீவுக்கு எதிராக வெகுண்டு எழுந்து, இலங்கையினின்று தமிழகம் போந்து, தனி ஒருத்தியாக, ஊர்மக்கள் நடுவில் நின்று வெடிகுண்டு பிணித்த உடம்புடன் அவனை மோதியழித்தலால், தானும் தன் இன்னிளவுயிர் நீத்துக் கொண்ட ஈகமறம், வேறெந்த ஈகத்தினும் தனிச்சிறப்பும் பெருமையும் கொண்டது ஆகலின் அ்து அழிவிலாப் புகழ்பெற்றது என்க.

இப்பாட்டு, நான்கு, வேறான செயற் படிநிலைகளைக் கொண்டது. ஆனாலும் நான்கு செயல்களும் படிப்படியே ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டது.

முதலது, தமிழீழத்தில் இனத்தாக்கம் நேர்ந்து, சிங்கள இனத்தாலும், இராசீவ் இந்தியாவினின்று அமைதிப் படை என்னும் பெயரால் அனுப்பி வைத்த அழிம்புப் படையாலும் தாக்கமுற்ற தமிழீழத் தமிழர், அது பொறுது, தங்களின் மானத்தையும் உயிரையும் வாழ்வையும் காத்துக்கொள்ள வேண்டி, வானூர்தி வழி வானையும், இயங்கிகள் வழி நிலத்-தையும், கப்பல் வழிக் கடலையும் கடந்து வெளிநாடுகளுக்கு ஏகியதும்,

இரண்டது, அவ்வாறு வெளிநாடு ஏகுவதற்கியலாத தமிழ மக்கள், அங்குள்ள கானகங்களில் புகுந்து ஒளிந்து வாழ்-தலும், இளவோராக உள்ள பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் விடுதலைப் போராளிகளுடன் போராட்டக் களத்தில் விரும்பியோ விரும்பாமலோ, போரில் ஈடுபட்டு, உடல்கள் சிதைதலும் உயிர்கள் சிதைதலும் ஆகி இடர்ப்படுதலும்,

மூன்றது, அவ்வாறு இடர்ப்பாடுற்ற குடும்பங்கள் ஒன்றினைச்

சேர்ந்த 'தானு' என்னும் ஒரு கழி இளம்பெண், அங்குள்ள படையினரால் கற்பிழந்தும், அவர் குடும்பத்தினர் அழிந்து பட்டதும்,

நான்கது, அவ்விடர்ப்பட்ட தானு, அறவுணர்வு தழுவிய மறவுணர்வு கொண்டு, தானும் தன் குடும்பும் இனமும் தாக்குண்ட கொடுமை பொறுதவளாகி, வெகுண்டு, அவற்றுக்கெல்லாம் காரணனாகிய இராசீவ் என்னும் வினையை அழித்தொழிக்கும் உள்ளத்தினும் உயிரினும் நிலைத்த பழிவாங்கும் கடுஞ்சினத்துடன், இந்தியா வந்து, தமிழகத்தில் சுற்றுச் செலவு மேற்கொண்டிருந்த இராசீவை, தன் உடலில் வெடிகுண்டு பொதிந்திருக்க நெருங்கி மோதி, மக்களெல்லாம் கூடியிருந்த கூட்டத்தின் நடுவில், அழித்தும் அழிவுண்டும் மாய்ந்ததும்—

—ஆகிய நான்கு செயல்களையும் உள்ளடக்கிக் கூறியதாகும் இப் பாடல்.

இந் நான்கு செயல்களும் ஒன்றின் ஒன்று அவலம் மிகுந்தது; இறுதிச் செயலாகிய தானுவின் தன்னழிவு மறம், கொடியன் ஒருவனை அழித்ததோடு தொடர்பு கொண்டதாகலின் ஈகவுணர்வால் பொருந்திய புகழ் கொண்டது; அதனால் உலகை ஈடுகொள்ளாப் பெருமை சான்றது;

இதில், தானு வென்னும் வீரத் தமிழ்ப் பெண், 'காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை' என்றும், 'அன்னைக் குலத்து ஓர் அறங்கூர் மறத்தி' என்றும், புகழப் பெறுவது, அவளின் இளம் பருவத்தையும், முது செயலையும் இணைத்துப் பார்த்துப் பெருமை சாற்றுவது;

'ஒருதனி நின்றே ஊர்நடு சிதைத்த ஈகம்' என்னும் தொடருள் வரும், 'ஒருதனி' என்பது, அவள் தனித்து நின்ற செம்மாப்பையும், 'ஊர்நடு சிதைத்த' என்பது, யாருக்கும் தெரியாமல் மறைமுகமாக அன்றி எல்லார்க்கும் முன்னழித்த செந்துணிவையும், 'ஈகம்' என்பது, அவள் உலக வெறுக்கையையும் கூறி, அவள் மனவுணர்வையும், இனவுணர்வையும், கொள்கை நிலையையும், இளமைப் பருவத்தையும் ஒருங்கே புலப்படுத்தி வீரத்தையும் அவலத்தையும் இணைத்துக் கூறியது என்க!

மானமும் உயிரும் வாழ்வும் கருதி: தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே, அங்குள்ள தமிழ்ப் பொது மக்களுக்குப் பலவகையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன; ஏற்பட்டு வருகின்றன.

அத் தாக்கங்களால் தொடர்ந்து உயிரழிவுகள் நேர்ந்து வருகின்றன; அவர்களின் வாழ்க்கை நலன்களும் சீரழிக்கப் படுகின்றன; குடியிருப்புகள் தீ வைத்துக் கொளுத்தப்படுகின்றன; சொத்துகள் கொள்ளையடிக்கப் பெறுகின்றன. பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர்; இதில் சிறுமியர், இளம் பெண்-

கள், திருமணம் ஆன மங்கையர், கருவுற்ற தாய்மார்கள், முதுஇளம் பெண்டிர்கள் என்னும் வேறுபாடுகள் இல்லை; பாலியல் தாக்கங்களுக்குப் பின்னர் அவர்கள் கொலை செய்யப் படுகின்றனர். இவற்றைத்தடுக்க முயற்சி செய்யும் ஆடவர்கள் வெட்டிக் கொல்லப் படுகின்றனர்; இளைஞர்கள் அனைவருமே போராளி-கள், அல்லது போராளிகளாக மாறக் கூடியவர்கள் என்னும் கருத்தில் படைத்துறைத் தங்கில்(முகாம்)களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்படுகின்றனர்.

இவ்வாறு அங்குள்ள தமிழர்களுக்கு மானஅழிவும் உயிரழிவும் வாழ்வுச் சிதைவும் ஏற்படுவதால், அவற்றினின்று தங்களைக் காத்துக் கொள்ளக் கருதி, அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல வேண்டியவர்களாக ஆகுகின்றனர்;

வானமும் நிலமும் நீரும் கடந்து: எனவே, தமிழர்கள் வானூர்தி வழியாக வான் எல்லையைக் கடந்தும், இயங்கிகள், பேருந்துகள் வழியாகவும், நடந்தும் தாக்கம் ஏற்படுகின்ற நிலப் பகுதியினின்று வேற்றிடங்களுக்குப் பெயர்ந்தும், கப்பல் வழி-யாகக் கடல் எல்லையைக் கடந்தும் அயல் நாடுகளுக்குச் செல்கின்றனர்.

கானமும் புகுந்து களத்தினும் நெரிந்து: அவ்வாறு செல்ல இயலாதவர்கள், நகரங்களில் நேரும் தாக்கங்களுக்கு அஞ்சித் தங்களைக் காத்துக் கொள்ள காடுகளில் ஓடி ஒளிந்து கொள்கின்றனர்; அவர்களில் இளைஞர்களாகவும் ஆடவர்களாக-வும் உள்ளவர்கள் போராளிகளுடன் சேர்ந்து, போராட்டக் களங்களிலும் சென்று சிதைபடுகின்றனர்; நெரிந்து — நெருக்-குண்டு — சிதைபட்டு — உறுப்புகள் இழந்து — உயிரிழந்து;

தானும் குடும்பும் இனமும் இடர்ப்பட: இவ்வகையில் அங்குள்ள தமிழர்களில் ஒவ்வொருவரும், அவர் அவர் குடும்பங்-களும் இனமும் பலவகையிலும் இடர்ப்பாடுகள் எய்த;

ஆயிரம்... ஈழத்தமிழர்: பல ஆயிரக்கணக்கில் இளைஞர்-களும் பெண்டிரும், இவ்வாறு உலகம் முழுவதும் போய் ஏதிலியர்களாக நாடு நாடாகத் திரிந்து வருவதும், பல நிலைகளில் மாய்ந்து போவதும் ஆகிய நிலைகளில் உள்ள ஈழத்தமிழர்கள்;

இடையினில் தோன்றி — அவர்களில் தானும் ஒருத்தியாகத் தோன்றி.

காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை — வயிரம் போல் உறுதியான நெஞ்சுடைய, கன்னிப் பருவத்தின் மலர வேண்டிய, இளமை சான்ற மொட்டுப் போன்றவள்.

தன்னையும் இழந்து — இராசீவ் அனுப்பிய படைத்துறை-யினரால் தன் பெருமையை இழந்து — சீர்குலைவுற்று;

தமரையும் இழந்த — தன் பெற்றோரையும் உற்றோரையும் அக்காவல் படையினரால் இழந்த; தமர்—தம்மவர்—பெற்றோரும் உற்றோரும்;

(தொடரும்)

இந்திரா பார்த்தசாரதியின் தவறான தமிழ மதிப்பீடுகள் !

வெங்காலூர்—குண

தமிழ்ப் பார்ப்பனர்க்கும் தெலுங்குப் பார்ப்பனர் தலைமை :

தெலுங்கர்கள் வந்தேறிகளாதலால் தமிழகம் வேங்கடத்தை இழந்தது ; சித்தூரை நீர்(தாரை)வார்த்துக் கொடுத்தது; மொழிவழி மாநிலங்களை அமைப்பதென்னும் சாக்கில் மலையாளி-களும், கன்னடரும் வேறு வந்து தமிழ்ப் பகுதிகளையெல்லாம் காயரிவது போல் அரிந்து கொண்டு போயினர். பார்ப்பனர் எதிர்ப்பு எனும் போக்கில் தமிழினமே தெலுங்கர் நலனுக்கு வால் பிடித்துக் கெட்டழிந்ததைப் போன்றே, தமிழ்ப் பார்ப்பன-ரெல்லாம் திராவிடக் கொள்கை எதிர்ப்பென்னும் பெயரில் தமிழ் நாட்டுத் தெலுங்குப் பார்ப்பனரின் கைப்பாவையாகித் தெலுங்-கரான காஞ்சி காமகோடியின் தலைமையின் கீழ் அணி திரண்டனர். தமிழகத்திலுள்ள இந்து முன்னனி, ஆர். எசு. எசு. விசுவ இந்து பரீசத், போன்ற அமைப்புகளெல்லாம் இந்தத் தெலுங்குப் பார்ப்பனரின் பாசறைகளே என்பது விளங்காமலில்லை.

திராவிடக் கொள்கையால் தமிழ்த் தேசிய இனக் கொள்கை மறைந்து நின்றது :

தெலுங்கர் நலனை ஓம்பிடவும், தெலுங்கர்கள் தமிழகத்தில் தங்கள் மண்பறிப்பைச் செவ்வனே செய்து முடிக்கவும் உதவிய திரையன் (Trojan) குதிரைதான் திராவிடக் கொள்கை. உள்ள-படியே ஆரிய மாயையும் திராவிட மாயையும் ஒட்டுப் பிறவிகள் (Siamese twins). ஆரியமே திராவிடத்தைத் தோற்றுவித்தது. இந்த ஆரிய—திராவிட பொய்ச் சண்டையால் தமிழினம் ஒரு தனி தேசிய இனமென்னும் ஓர்மை நன்கு மறைத்து வைக்கப் பெற்றது.

திராவிடக் கொள்கையைத் தழுவி வளர்ந்த திராவிட முன்னேற்ற கழகமோ, தமிழிளைஞர்களிடம் இயல்பாகக் கனன்-றெழுந்த தமிழ்த் தேசிய ஓர்மையின் வெளிப்பாடாகிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒட்டும் இல்லாமல் உறவும் இல்லாமல் செவ்வனே பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வந்தது. மேடைப் பேச்சு அரசியலுக்கு மட்டும் தமிழைப் போற்றிய திராவிட ஆட்சி, ஆங்கிலத்தின் மீது காமுற்று நின்றதேயன்றி, தாய்மொழிக் கல்வியை நிலைப்படுத்த முடியாமல் தமிழகமே இன்னொரு மொரிசியசாகக் கெட்டழிய காரணமாகியது. தமிழகத்திற்கு இயல்பாகக் கிடைக்க வேண்டிய காவிரி, நகரியாறு போன்ற ஆற்று நீர்ப் பங்கை உரிய நேரத்தில் கட்டிக் காக்க முடியாமல், முற்றுமாக இழந்த போது, மானத்தை மறைக்க ஒரு துண்டுத் துணிக்காகத் தில்லிக் கொலுவிடம் மன்றடிக் கெட்டது.

இராசிவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் தில்லியின் துணையோடு ஏவிவிட்ட உதிரி வன்முறையைக் கொண்டு செயலலிதா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை வீழ்த்தியதைத் தமிழ் ஓர்மையாளர்களெல்லாம் திராவிடக் கொள்கையின் வீழ்ச்சியாகக் கருதி பெருமூச்செறியவே செய்வர்.

திராவிடம் வீழ்ந்து தமிழம் வளரவேண்டும்.!

ஆனால் தொலைநோக்கென எப்போதுமே இராத பார்ப்பனிய வட்டங்களோ, செயலலிதா தில்லியின் அடிமைப் பெண்ணாக ஆட்சிக் கட்டிலேறியதைப் பார்ப்பனியத்தின் வெற்றியாகக் கருதிக் களியாடுவது நகைப்பிற்குரியது. திராவிடமென்னும் பொய்ம்மை வீழ்ந்து, தமிழம் என்னும் பூதம் வானளாவ வடிவெடுக்கப் போகின்ற அறிகுறி அவர்களின் கண்ணுக்குத் தெரியவில்லை. தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியைக் கெடுத்துக் கொண்டிருந்த கருத்துக்கள்ளியாகிய திராவிடம் வேரறுந்து பட்டுத் தமிழ்த் தேசிய இன ஓர்மை தலைப்படத் தொடங்கியுள்ளது அவர்களுக்கு விளங்கவில்லை. தமிழின ஓர்மையாளர் மீதும் அறிஞர் மீதும் அரசு வன்முறையையும் அடக்குமுறையையும் ஏவிவிட்டால், எல்லாம் அடங்கிப் போய்ப் பார்ப்பனியம் ஓங்கி விடுமென அவர்கள் மனப்பால் குடிக்கின்றனர். கிழக்கு அய்ரோப்பாவிலும் சோவியத்து ஒன்றியத்திலும் பொதுவுடைமைக் கொள்கை தோற்றுவிட்டதாகச் சொல்லித் துள்ளி மகிழும் பார்ப்பனிய நலன்கள், அங்கெல்லாமுள்ள ஒடுக்குண்ட தேசிய இனங்கள் உருசிய பேரின வல்லரசுக்கு எதிராகக் கிளம்பியுள்ளதையும் சோவியத்து வல்லரசு கூறுகூறாக உடைந்து வருவதையும், கண்டு மறுபுறம் அரண்டு பேயறைந்தாற் போல் நிற்கின்றனர். அதே நிலை இந்தியாவுக்கும் கட்டாயம் வரத்தான் செய்யும் என்பதறியாது ஊழி வெள்ளத்திற்கு வாயால் அணைபோடப் பார்க்கின்றனர். இவர்களின் தலைவெறிக் கோலம் வடமொழியாகிய பிராகிருதத்திலிருந்தே தமிழ் மொழி பிறந்த தெனப் பிதற்றுமளவுக்குப் (கோ.எசு. சீனிவாசன், தமிழில் வடமொழி, தமிழ்மணி, தினமணி இணைப்பு 12-10-91) போயுள்ளது.

ஆண்டை மொழி :

தாளம் தவறி ஆடுகின்ற கூற்றுகள் இன்னும் சில இந்திரா பார்த்தசாரதியின் கட்டுரையில் உண்டு.

> "சமசுகிருதம், பிராமணர்களுக்கு மட்டும் உரிய மொழியன்று; சாதி அமைப்பை நிலைநிறுத்துவதில் தீவிரம் காட்டிய மனு சாத்திரமும், பிராமணியத்தைக் கடுமையாகச் சாடிய சார்வாகமும் சமசுகிருத மொழியில்தான் தோன்றின."

—என்னும் அவருடைய கூற்றிலடங்கிய பகுதி உண்மையை மறுக்கவில்லை.

அடிமை மீட்பே உலக வரலாறு :

ஓர் இனம் இன்னோர் இனத்தை அடிமைப்படுத்துவதென்னும் போக்கே உலகளாவிய வரலாறு (அல்லது உலக வரலாறு).

எகிப்தியரின் கீழ் அடிமையுண்டு கிடந்த யூத இனத்தவரை ஒன்று திரட்டி மீட்டு ஒரு 'பொன்னுலகைக்' காட்டிய மோசேயின் கதையே விவிலயத்தின் பழைய ஏற்பாடு படிக்கும் அடிப்படைப் பாடம். ஒடுக்குண்ட ஓர் இனம் தன்னுடைய தேசிய விடுதலைக்காகப் போராட முனைகையில், அந்த இனம் தன்னுடைய மொழியையும், அம்மொழியைக் கருவாகக் கொண்ட பண்பாட்டையும் தம் மக்களை ஒன்றுபடுத்துகின்ற கொள்கைக் கருவியாக்கிக் கொண்டதுண்டு. வேறு சில இனங்களோ தம்முடைய மண்ணில் அரும்பிய அல்லது வளர்ந்த ஒரு மதத்தை அத்தகைய கருவியாகக் கொண்டதும் உண்டு. இந்நிலையில் ஆண்டை மொழியென்றோ ஆண்டை மதமென்றோ கருதி, ஒரு மொழியையோ மதத்தையோ இன ஒடுக்கலின் எச்ச (சின்ன) மாகக் கருதியதொன்றும் உலகில் யாங்கணுமே காணாததன்று. இது சங்கதமாகிய சமற்கிருதத்திற்கும் கூட பொருந்தும்.

ஒவ்வோரினமும் தத்தம் மொழியைத் திணித்தது !

ஒரு குழூஉக் குறியாகத் தொடங்கி இலக்கிய மொழியாகவும் சமய மொழியாகவும் வளர்ந்ததோடன்றி, பார்ப்பனியமென்னும் அரசுக் கொள்கையும், வாழ்வியல் நெறியும் கோலோச்ச நேர்ந்த போது, அச்சங்கதம் ஆட்சி மொழியாகவும் கொற்றம் புரிந்தது. ஏற்றத்தாழ்விற்கு இலக்கணம் கண்ட கொடுநெறிக் (ஃபாசிசக்) கொள்கையாகிய பார்ப்பனியத்தின் குல அடையாள(சின்ன)மாக அந்தச் சங்கத்தை ஒடுக்குண்ட சாதியினர் கருதுவதொன்றும் விளங்காத புதிரன்று. ஆங்கிலேயர் ஆளவந்த போது ஆங்கிலத்தைத் திணித்தனர். மராத்திய வந்தேறிகள் மராத்தி மொழியைத் தமிழகத்தில் திணித்தனர். 1854 ஆம் ஆண்டு வரையில் வருவாய்த் துறைக் கணக்கு வழக்கையெல்லாம் எழுதி வந்த மொழியாக மராத்தி தமிழகத்தில் விளங்கியது. முசுலீம்கள் ஆண்ட போது (பார்சி, அரபி வழி வந்த) உருது மொழியை வலிய புகுத்தினர். விசயநகரத்துத் தெலுங்கு வல்லரசாளர்கள் தெலுங்கைத் திணித்தனர்.

இத்தனைக்கும் தமிழ் அழியாமலிருந்தது எப்படி ?

வந்தேறி ஆளவந்தார்களெல்லாம் இவ்வாறு தத்தம் மொழியைத் தமிழினத்தின் மீது வலிய திணித்து வந்த போதிலும், தமிழென்னும் மொழி மட்டும் மக்கள் பேச்சு வழக்கிலும் இலக்கிய இலக்கண மரபுடனும் வளமுடனும் பெரு வழக்கிலிருந்த காரணத்தை மட்டும் தமிழ்ப் பார்ப்பன-நலன்கள் உன்னிப் பார்க்க மறுப்பதேன் ? பிறர் வந்து நாடு பிடித்து ஆள்கையில் மாய்ந்து மறைந்து போன மொழிகள் எத்தனையோ உண்டெனினும், தமிழுக்கு மட்டும் அந்த நிலை ஏற்படாததன் காரணம் யாதென்னும் கேள்வியிலிருந்தே இந்திரா பார்த்தசாரதிகளும் தம்தேடலைத் தொடங்க வேண்டும். இந்தத் தேடல் அறிவியல் நெறியில் அமைந்திருக்குமாயின், சங்கதத்தை எதிர்க்கின்ற போக்கு தமிழரிடத்தில் கால் கொண்ட அரசியல் குமுகிய காரணம் விளங்கும்.

நுனிப் புல் மேய்தல் :

சங்கத எதிர்ப்பென்பது திராவிட இயக்கத்தில் ஆழ ஓடியதாக என்றுமே இருக்கவில்லை. பெரியாரும் அண்ணாவும் கலப்புத் தமிழிலேயே எழுதி வந்தனர். கலைஞர் கருணாநிதியின் தமிழும் அவ்வாறே; அவருடைய இன்றைய தமிழ் மணிபவளமாக மெல்ல மாறி வருகின்றது. ஒரு நாளைய தினமணியையும் விடுதலையையும் தினகரனையும் பிற திராவிட ஏடுகளையும் எடுத்து வைத்துக் கொண்டு பார்த்தால், தினமணியின் அளவுக்குக் கூட திராவிட ஏடுகளில் மொழித் தூய்மை இல்லை. தினமணி ஆக்கித் தந்த அளவுக்கு இன்றைய திராவிட ஏடுகள் தமிழில் புதிய சொல்லாக்கங்களைச் செய்யத் துணியவில்லை. 'குடியரசுத் தலைவர்' என தினமணி எழுதுகையில் திராவிட ஏடுகள் இன்னும 'ஜனாதிபதி' என்றோ, 'ராஷ்ட்ரபதி' என்றோதான் எழுதிக் கொண்டிருக்கின்றன: 'மக்களவை' 'மாநிலங்களவை' என தினமணி ஆள்கையில் 'லோக்சபா', 'ராஜ்யசபா' என்றெல்லாம் திராவிட ஏடுகள் எழுதிக் கொண்டிருக்கின்றன. போதாமைக்கு, சாதி ஒழிப்புப் பேசிய திராவிட ஏடுகளும் தலைவர்களும் தீண்டப்படாதோராக வைத்து இழிவு படுத்தப்பட்ட புறயரையும் பள்ளரையும், 'தந்தை யாரெனத் தெரியாது கடவுளுக்குப் பிறந்தவன்' (கொச்சைத் தமிழில் கோவில் பரத்தையரின் பிள்ளைகளைக் குறிக்கும் 'தேவடியாள் மகன்') என்னும் பொருளில் காந்தி வஞ்சப்புகழ்ச்சியாய்ச் சூட்டிய 'அரிசனன்' என்னும் பெயரைக் கூசாமல் ஆண்டு, அந்தத் தாழ்த்தப்பட்ட குடிகளின் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி வருவதை இன்றும் தொடரவில்லையா?

தமிழ்த் தேசிய எழுச்சி :

தொடக்கக் கால திராவிட முன்னேற்றக் கழகத்தில் தமிழில் ஓரளவு தெளிவு இருந்து வந்ததெல்லாம் அந்தத் திராவிட இயக்கத்திலிருந்து உள்ளீட்டில் வேறுபட்டு நின்று தமிழின ஓர்மைக்கு வித்திட்ட மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், கா. அப்பாத்துரையார் போன்ற தனித்தமிழ்த் தலைவர்களின் கருத்து வலிமையினால் ஏற்பட்ட தாக்கங்களாலேயே ஆகும். தனித்தமிழ் இயக்கத்தால் அந்தத் திராவிட இயக்கத்தை இனங் கண்டுக் கொண்டு எதிர்க்க முடியவில்லை யெனினும், அஃது அந்தத் திராவிட இயக்கத்திலிருந்து உள்ளீட்டிலும் இயல்பிலும் வேறானது: தமிழின ஓர்மையைப் புதைத்து மறைத்து வைத்திருந்த திராவிட இடிபாடுகளிலிருந்து தமிழ்த் தேசியம் பூதமென எழும்பவே செய்யும்: திராவிட இயக்கத்தால் வேண்டுமென்றே தோற்றுவிக்கப்பட்டதே சங்கத எதிர்ப்பென்பது, அரண்டுபோன பார்ப்பனர்களுக்கு அறிவு அறவே கெட்டுப் போனதைத் தான் காட்டுகின்றது.

மறைமலையடிகளும் பாவாணரும் பெருஞ்சித்திரனாரும் :

மொழி அறிவியல் நெறிகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், வரலாற்றையே தலைகீழாகப் புரட்டிச் சொல்லி தமிழ்

Scanned with CamScanner

உட்பட உலக மொழிகளெல்லாம் சங்கதத்திலிருந்தே தோன்றியது என்னும் 'ஆரிய' இனவெறி மொழிக் கொள்கையே தமிழர்களிடம் சங்கத எதிர்ப்பிற்கு வித்திட்டது என்னும் உண்மை இந்திரா பார்த்தசாரதிகளுக்கு எங்கே விளங்கப்போகின்றது ? சங்கதத்தை முதன் மொழியாகச் சொல்வது ஆரிய இனவெறி மொழிக் கொள்கை. இதைத் தகர்த்துத் தரைமட்டமாக்குவது இனமானம் கொண்ட அறிஞர்க்கு ஒரு வரலாற்றுத் தேவையான போது மறைமலையடிகளும் பாவாணரும் காலத்தால் தோற்றுவிக்கப்பட்டனர். அதை அரசியற்படுத்திய பெருஞ்சித்திரனார் தமிழக விடுதலைக்கு எக்காளம் ஊதினார். சமற்கிருத இனவெறி மொழிக் கொள்கைக்குச் சாவுமணி அடித்ததே பாவாணரின் சொல்லாய்வுகள் தாம். தமிழின் வித்துச் சொற்களையும் வேர்ச் சொற்களையும் முளைச் சொற்களையும் கிளைச் சொற்களையும் அலசி அலசி ஆய்ந்து காட்டிப், பார்ப்பனியத்தின் ஆரிய இனவெறி மொழிக் கொள்கைக்கு வேரிலேயே வேட்டு வைத்த பாவாணரின் மொழியியல் ஆய்வுகள், தமிழ்த் தேசியத்திற்கு ஒரு புதிய நம்பிக்கையொளியாகத் திகழ்கின்றன. இத்தகைய அறிவியல் வழி ஆய்வுகள் யாவும் அய்ரோப்பியர் கற்பித்த ஆரியச் சார்பு மொழிக் கொள்கைகளையே கேள்விக்குரியதாக்கியுள்ளன.

ஆரியப் பார்ப்பனியத்தின் உத்தி :

இந்நிலையிலிருந்து பார்த்தால், சங்கத மொழியே வடக்கே தோன்றிய மொழியன்று; சேர நாட்டில் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மொழியே அஃதென கருதுவாரும் உண்டு. அம்மொழி தெற்கில் தோன்றியதா, வடக்கில் தோன்றியதா என்பதன்று கேள்வி. அது தெற்கில் வளம் பெற்றதா வடக்கில் வளம் பெற்றதா என்பதும் கூட அன்று நாம் விடைத் தரப் புகும் கேள்வி. இலத்தின் மொழி கூட வளமிக்க ஒரு தொன்மொழி ; சமயம் ஓம்பிய மொழி. ஆனால் இலத்தின் மொழியைத் தழுவி வளர்ந்த ஆங்கில, ஃபிராஞ்சு, செருமனிய மொழிகளும் திருச்சபைகளும் கூட அந்த இலத்தின் மொழியின் மேட்டிமையை எதிர்த்துப் போர்க்கொடி ஏந்தவில்லையா? சங்கதமென்னும் குலக்குறியின் வழியாகப் பழைய பார்ப்பனியமும் புதிய பார்ப்பனியமும் இந்தி—இந்து வல்லரசியக் கொள்கையின் கூட்டுக்குள் பாய்ந்து கொண்டு உயிருள்ள தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் வரலாற்றையும் கெடுக்கவும் அழிக்கவும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கையில், அதை எதிர்த்து இனமானம் கொண்ட எந்தத் தமிழன் தான் கொதித்தெழ மாட்டான் ? முற்போக்கு முக்காடு போட்ட பார்ப்பனரும் கூட இந்த இனமான உணர்ச்சியை இனவெறியென முத்திரை குத்திக் கொச்சைப் படுத்துவானேன் ? இனவெறியே இலக்கணமாகக் கொண்ட ஆரியப் பார்ப்பனியத்தின் உத்திதானே அது ?

சாதி மொழி அன்றே :

"சாதிக்கென்று ஒரு தாய்மொழி இருக்க முடியாது" எனப்

பாடம் படிக்கின்ற இந்திரா பார்த்தசாரதி "வகுப்பு மொழி வழக்கு (Class dialect) என்றொன்றில்லை" என்று சொல்லிய இசுடாலினின் வரட்டு மொழிக் கொள்கையையே நினைவு படுத்துகின்றார். அன்று 'அவாள், இவாள்' என 'வாள்'போட்டுப் பேசுவதைத் தனிப் பார்ப்பன சாதிப் பேச்சு வழக்காகக் கட்டியழுது கொண்டிருந்தார்கள். அதில் சற்றே மாறியிருந்தாலும் அந்தத் தனிச் சாதி மொழிநடையைப்(Caste dialect)பார்ப்பனர்கள் இன்னும் கைவிடாததே அதனை மெய்ப்படுத்தும். சகரத்தில் தொடங்கும் முதலெழுத்துக்களையெல்லாம் Cha என்றுதான் தமிழில் பொதுவாக ஒலிக்க வேண்டும். சொல்லுக்கு இடையில் வரும் சகரம் Sa என்று ஒலிக்கப்பெறும். இதை மலையாளிகள் சரியாகவே ஒலிப்பர். சோறு என்பதைச் Choru என்றும், சொல் என்பதைச் Chol என்றும் ஒலிக்க வேண்டும். இதனால்தானே சொல்லுக்கு முதல் ஒலியாக Sa இருப்பின் ஸ என்னும் வடவெழுத்தைக் கற்பித்தனர்? ஆனால் தமிழ்ப் பார்ப்பனர்கள் இன்று வேண்டுமென்றே செய் (Chey) என்பதை ஃஜெய் (Shey) என்றும், சொல் (Chol) என்பதை ஃஜொல் (Shol) என்றும் வேண்டுமென்றே சொல்லி வருவது தம்முடைய சாதியின் தனிமையைக் குறிப்பால் உணர்த்தும் மொழிவழக்கால் தானே வந்தது?

சங்கதத்தை எழுதவும் படிக்கவும் தெரியாத பார்ப்பனரெல்லாம் கூட அம்மொழியைத் தெய்வமெனத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு வழிபடுவது அந்தச் சங்கதம் பார்ப்பனரின் குலமொழி என்பதைத் தானே காட்டுகின்றது. தமிழுக்கு வழிபாட்டில் முதலிடம் தந்த மாலியப் பார்ப்பனரைத் தென்கலையினர் என்றும், சங்கதத்திற்கு முதலிடம் தந்த மாலியப் பார்ப்பனரை வடகலையினர் என்றும் பகுத்துத் தென்கலையினரைத் தாழ்வாக மதித்ததெல்லாம் எதைக் காட்டுகின்றன? சங்கதம் சாதிமொழி இல்லையா? சிவனிய நாயன்மார்களெல்லாம் சங்கதம் கலந்த மொழியிலேயே பொதுவாக எழுதினர், ஆனால் ஆழ்வார்களோ தனித் தமிழின் முன்னோடிகளாக விளங்கினர். இவர்கள் வழியாகவும் தமிழுக்கும் ஆரியத்திற்கும் இடையிலான பூசல் வெளிப்பட வில்லையா? தமிழைப் பழித்த ஆரிய மொழியினரை நக்கீரர் சாடவில்லையா?

இதுவரை எழுதப் பெற்ற வரலாறெல்லாம் இனப் போராட்டங்களின் வரலாறே என்பது இவற்றால் விளங்கும். தமிழர்களின் தனித் தன்மையும் தனி வரலாறும் தனிப் பண்பாடும் இந்திரா பார்த்தசாரதி திரித்துச் சொல்லும் 'பண்பாட்டுத் தனிமை' (கலாச்சாரத் தனிமை) ஆகிவிடாத "வழக்கொழிந்து போன சொற்களால்" அடையாளப்படுத்திக் கொள்வது தான் தனித் தமிழெனின், இந்தியைப் பரப்புவதை முழுமூச்சாகக் கொண்டுள்ள இந்தி(ய)த் தொலைக்காட்சி, வானொலி போன்ற அமைப்புகள் இந்துசுத்தானி சொற்களையெல்லாம் கூட மெல்ல மெல்ல நீக்கி விட்டுப் பேச்சு வழக்கிலும் இல்லாத பழைய சங்கதச் சொற்களை

வலிய அன்றூடம் புகுத்துவது மட்டும் அடுக்குமோ ? சங்கதம் ஒரு சாதி மொழியாக இல்லையெனில், இந்திரா பார்த்தசாரதிகளுக்கு ஏன் இந்த இரட்டை அளவுகோல் ?

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' (தினமணி 28—10—91) என்னும் இன்னொரு கட்டுரையில் இந்திரா பார்த்தசாரதி குறிப்பிடுகின்றூரே அந்தப் ''பொறுமை உணர்வு'' தானே 'இந்தி' யரிடம் இருக்கின்ற தமிழ் எதிர்ப்பு வெறிக்குக் காரணம் ?

> ''ஒரு நீண்ட இலக்கியப் பாரம்பரியத்துக்கு வாரிசாகத் தமிழ் இருக்கின்றது என்பதே, பிறமொழி பேசும் படித்தவர்களின் அடிமனத்தில் தமிழின் பால் ஒரு பொறுமை உணர்வு நிழலிடுவதற்குக் காரணமாக அமைந்தது. முப்பத்து மூன்று ஆண்டுகள் தில்லியில் இருந்த என்னுல் இதை ஊகிக்க முடிந்திருக்கிறது''

என்னும் அவர் தருகின்ற விளக்கமே தமிழர்களின் பண்பாட்டுத் தனிமை என்னும் அவருடைய புலம்பலைப் பொருளற்றதாக்கி விடுகின்றது. தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதனுல் சங்கதத்தின் மேட்டிமையையும் வல்லாட்சியையும் அஃது ஏற்க மறுத்ததும், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பில் காலூன்றி நிற்கின்ற ஒரே தனி இனம் தமிழினம் என்பதாலும் தானே மாற்ருர் தமிழை வெறுக்கின்றனர் ? தமிழ் மட்டுமின்றித் தமிழரும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்'' என்னும் அவருடைய பட்டறிவுக்கு அது தானே காரணமாகின்றது ? ○

ஃ ஆரிய மருத்துவமான ஆயுர் வேதத்திற்கு இந்தியா முழுவதும் 100 கல்லூரிகள் உள்ளன. ஆனுல் தமிழ் மருத்துவமான சித்த மருத்துவத்தைப் பயிற்றுவிக்க தமிழ்நாட்டில் பழனி, பாளையங்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் இரண்டே இரண்டு கல்லூரிகள் மட்டுமே உள்ளன.

ஃ ஞாலுதல்—தொங்குதல் ; ஞால்கு—தொங்கிக்கொண்டிருப்பது ; ஞால்—நால் ; ஞால்கு—நால்கு—நாக்கு. தமிழ் ந பிராகுவி போலும் வட திராவிட மொழிகளில் த —வாகத் திரியும். இதே நமேலையாரிய மொழியிலும் த —வாகத் திரிகிறது. நால்கு — நாக்கு — தெலுங்கில் நால்கு என்னும் சொல் பேசு என்னும் பொருள் தந்து, நாலிக என்றும், கன்னடத்தில் நாலிகெ என்றும் வழங்குகிறது. மேலையாரியத்தில் நால்கு என்பது தால்கு என்று திரிந்து பேசு, பேச்சு என்னும் பொருள் தரும் டாக் (talk) என்னும் சொல்லாக வழங்குகிறது.

ஃ இந்தியாவில் கறுப்புப் பணம் (அஃதாவது கணக்குக் காட்டப் பெறுத பணம், தொடர்ந்து மிகுந்து கொண்டே போகிறது. அ்து ஒரு மணி நேரத்தில் 4.2 கோடி உருபா மிகுவதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது.

Scanned with CamScanner

தமிழின் உயர்ச்சியும், சமற்கிருதத்தின் தாழ்ச்சியும்!

குடந்தை, வீரா. இராசகோபாலன், கீ.க.இ; க.மு.

(இதழாசிரியர் குறிப்பு: 'தினமணி' தொடங்கி வைத்த ஆரிய—திராவிட, தமிழ்—சமற்கிருதக் கருத்து மோதல்களில் ஆரியப் பார்ப்பனச் சார்பான கருத்துகளே மேலோங்கி நிற்குமாறு கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப் பெற்று வெளியிடப் பெறுகின்றன.

இக் கருத்துகளை நன்கு முறியடிக்கக் கூடிய கட்டுரைகள் இவ்விதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

இக் கட்டுரையை எழுதிய அறிஞர்: பேரா, வீரா. இராசகோபாலன் மொழியியலை நன்கு கற்றவர். இயற்கை மொழியாகிய தமிழுக்கும், செயற்கை மொழியாகிய சமற்கிருதத்திற்கும் உள்ள எழுத்தியல், மொழியியல் வேறுபாடுகளை இதில் நன்கு விளக்கியுள்ளார்.)

எசு. சீனிவாசனின் 'தமிழில் வடமொழி தினமணி' கட்டுரைகள்:

திரு. கே. எசு. சீனிவாசன் அவர்கள் "தமிழில் வடமொழி" என்ற தினமணியின் கட்டுரை மூலம் வடமொழி எதிர்ப்பைத் தூண்டிவிடுகிறார். அவரை அறியாமலேயே அவர் செய்யும் அறிவற்ற செயல் இது. அவரது பெயரில் "ஸ்ரீ" என்ற எழுத்தை யிட்டுத் தமிழ்மொழி வெறுப்பையும், வடமொழி வெறியையும் காட்டுகிறார். காழ்ப்புணர்ச்சியால் மேடைப் பேச்சாளர்கள் மேலும், அரசியல்காரர்கள் மேலும் விழுந்து பிடுங்குகின்றார். "அக்ராசனர்" தலைவராகவும், "அபேஷகர்" வேட்பாளராகவும், "க்ஷேமம்" நலமாகவும், "பத்திரிகை" இதழாகவும், "மாயவரம்" மயிலாடுதுறையாகவும், "நமஸ்காரம்" வணக்கமாகவும் இவை போன்ற எண்ணிறந்த வட சொற்கள் தமிழாக்கம் பெற்றுத் தமிழ் தனித் தன்மை பெற்றுள்ளதை உணர மறுக்கிறார்.

"இளைய சமுதாயத்தை ஆங்கில மோகத்திலிருந்து விடுவிக்க ஒரு சாதனமாகத் தமிழின் பெருமையை எவ்வளவு கூறினாலும் தகும். சுதந்திர நாட்டில் மொழிப்பற்று ஒரு முக்கிய சாதனம் என்று சொன்னால், தமிழைக்காட்டிலும் தொன்மையான பேசும் மொழி வேறில்லை" என்று கூறுகின்ற சீனிவாசன், வடமொழி வெறியிலிருந்து விடுவிக்க ஒரு கருவியாகத் தமிழின் பெருமையை எடுத்துக் கூறினால், "தமிழ்ச் சிறப்பு அன்று; வடமொழி எதிர்ப்பு" என்று சீறுகிறார்.

"தமிழ்க் காவலர்" என்று தம்மையே கூறிக் கொள்ளும் சில அரசியல்காரர்கள்" என்று கோழைத்தனமாக கலைஞர் அவர்களைச் சுட்டுகிறார். கலைஞர் அவர்கள் ஒருபோதும் தம்மையே "தமிழ்க்

காவலர்'' என்று கூறிக் கொண்டது கிடையாது; அவரை உயிருக்குயிராகப் போற்றும் அவர்தம் தொண்டர்கள்—பற்றுளர்கள் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கலாம். ''ஜகத்குரு'' என்று தம்மையே கூறிக் கொள்ளும் சங்கராச்சாரியாரைப் பார்த்து இவர் சீறுவதேன்? பார்ப்பான் செய்தால் பன்னீர்ப் பாயசம்; தமிழன் செய்தால், வெறும் தண்ணீரா?

பார்ப்பனர்களுக்கு அறிவுக் கூர்மை இல்லை :

பார்ப்பனர்களுக்கு அறிவுக் கூர்மை ஒருபோதும் இருந்ததில்லை; நுண்மாண் நுழைபுலமும் இருந்ததில்லை; சிந்தனை ஆற்றலும் கிடையாது; நுண்ணறிவும் இல்லை. ஆனால், பொத்தகப் புழுக்கள்; நூலறிவு கொண்டவர்கள். இவர்களைப் போய் அறிவு உயிரிகள் என்று கூறுகிறார்களே அதுதான் வேடிக்கை!

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலக்கியம் படைத்த மொழியாகிய தமிழ் ''சிறுபிள்ளையெனச் சொல்லத்தக்க இந்தியை எதிர்ப்பது ஒரு பாட்டன் தன் பெயரனைச் சண்டைக்கிழுப்பது போல் அல்லவா? தேவையற்ற பொறாமை'' என்று எங்ஙனம் பார்ப்பனர்கள் இந்திக்கு அதிகாரவுரிமை (வக்காலத்து) வாங்குகிறார்கள் பாருங்கள். தமிழுக்கு உரிமையதிகாரம் பேசுகிறார்களா? இல்லையே. எனவே, இவர்கள் தமிழ்ப் பகைவர்கள் என்பதில் ஐயமே இல்லை.

பிறரை ஏமாற்றி வாழ்வதில் வல்லவர்கள் :

இந்தி எப்படித் தமிழுக்குப் பெயரனாக முடியும்? அ'து என்ன தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மற்றைய திராவிட மொழிகளின் கிளைமொழியா? இல்லையே. இந்தி வேற்றுமொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. எப்படிச் சொல்லியிருக்க வேண்டும்; ''தமிழ், சிறு பிள்ளையெனச் சொல்லத்தக்க இந்தியை எதிர்ப்பது ஒரு முதியவர் சிறுபிள்ளையைச் சண்டைக்கிழுப்பது போல் அல்லவா?'' என்றன்றோ சொல்லியிருக்க வேண்டும்; அப்படிச் சொல்லியிருந்தால், ஓரளவு அறிவுக்குப் பொருத்தமானதாக இருந்திருக்கும். சண்டைக்கிழுப்பது யார்? இந்தியா? தமிழா? தமிழை வல்லாண்மை(ஆதிக்கம்) செய்ய முயலுவது இந்தி; தமிழ் ஒரு போதும் இந்தியை ஆளுமை செய்ய முயன்றதும் இல்லை. நினைத்ததுமில்லை. தமிழ் சண்டைக்கிழுப்பதாக பார்ப்பனர்கள் திசை திருப்புகிறார்கள். நல்லவர்களாக இருந்தால் என்ன செய்வார்கள்? சிறு பிள்ளையைப் பார்த்து ''ஏம்பா, முதியவரிடம் போய்ச்சண்டை போடுகிறாய்'' என்று கேட்டு அறிவுரை சொல்லித் திருத்துவார்கள். அவ்வாறு பார்ப்பனர்கள் நல்லவர்களாக இருந்தால் மற்றும் என்ன செய்திருக்க வேண்டும்: நடுவண் அரசைப் பார்த்துத் ''தமிழைக் காட்டிலும் தொன்மையான பேசும் மொழி வேறில்லை. நம் நாட்டிலே கழக இலக்கியத்திலிருந்து இன்று வரை இடைவிடாது, பழக்கத்தில் உள்ள மொழி தமிழ்; தொன்மையில் முதன்மை வாய்ந்தது; கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே இலக்கியம் படைத்த மொழி தமிழ்;

அங்கே மூன்று, நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் உருவாகிய இந்தியைக் கொண்டு போய்த் திணிக்கிறீர்கள்?'' என்று கேட்டுத் திருத்தியிருக்க வேண்டும். பார்ப்பனர்கள் நல்லவர்கள் இல்லை. ஆனால், பிறரை ஏமாற்றி வாழ்வைப் பெறுவதில் வல்லவர்கள்; ஆகவே, செய்யமாட்டார்கள்.

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் ஆரியர்களும் அல்லர் ; பிராமணர்களும் அல்லர் :

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் ஆரியர்களும் அல்லர் ; பிராமணர்களும் அல்லர் ; அவர்கள் நாடோடிக் கூட்டத்தினர்; அவர்களுக்கென்று ஒரு கையளவு உரிமை கொண்ட நிலம் கூடக் கிடையாது. எலிகளுக்குக் கூடச் சொந்தமாக வளைகள் உண்டு; ஆனால், இவர்களுக்குச் சொந்தமாக ஒரு நாடு கூடக் கிடையாது. காலப் போக்கால் ஆரியர், பிராமணர், பார்ப்பனர் எனலாயினர். அதேபோன்று சமற்கிருதமும் காலப் போக்கால், வடமொழி எனலாயிற்று. அதேபோன்று நாடோடிகளால் பேசப்பட்ட மொழியும் காலப்போக்கால் ஆரியம் எனலாயிற்று. ஆய்வாளர்கள் மக்கள் தோற்றம் இலெமூரியாக் கண்டமே என்பர். கடற்கோளினால் அங்கு வாழ்ந்த மக்கள் பல திசைகளுக்குச் செல்லலாயினர்; அப்படிச் சென்ற மக்களுள் ஒரு பகுதியினர் நாடோடிகளாயினர். தட்ப வெப்ப மாறுபாட்டால் குரலொலிகள் மாறுபடலாயின. அவர்களே ஆரியர்கள் என்பது வரலாறு.

ஆரியர், அந்தணர், அய்யர், பார்ப்பனர்கள்—ஆகியவை தூய தமிழ்ச் சொற்களாகும் :

நாடோடிகளாக வாழத்தலைப்பட்டவர்கள் ஆங்காங்கே நிலை கொண்டனர். அதனால் அவர்களுக்கென்று ஒரு நாடில்லை; நிலை கொண்ட இடங்களில் வழங்கிய உயரிய சொற்களைத் தன்வயப்படுத்தித் தமதாக்கிக்கொண்டு, தங்களுக் குரிதாக்கிக்கொண்டனர். இதே போன்று, உயர்ந்த கருத்துகளையும் பொருள்களையும் தன்வயப்படுத்தித் தமதாக்கிக் கொண்டனர். அவ்வகையில் அமைத்துக் கொண்ட ஆரியர், அந்தணர், அய்யர், பார்ப்பனர் போன்றவை உயரிய தமிழ்ச் சொற்களாகும். காலத்தின் கட்டாயத்தினால், நாமும் அச் சொற்களால் அவர்களை அழைக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டு விட்டது. அதே போன்று வழக்கொழிந்த — வாழ்விழந்த — செத்த சமற்கிருதத்தையும் காலத்தின் கட்டாயத்தினால் வடமொழி என அழைக்கவேண்டிய அவல நிலை உண்டாகி விட்டது.

சமற்கிருதம் என்றால் செப்பம் செய்யப்பட்டது என்பதாகும்; (சமஸ் + கிருதம் : இணைத்து—கூட்டி-ச் செய்யப்பட்டது. ஆரியர்களின் பேச்சு மொழியாகிய வேதமொழி, பிராகிருதம், வடதமிழம் ஆகியவற்றை இணைத்துச் செய்யப்பட்டது.) அதற்கு முன்னர் ஒழுங்கற்ற—செப்பமுறாத — நாடோடி மொழியாகவே இருந்திருத்தல் வேண்டும். அம் மொழிக்குப் பின்னர் ஆரியமொழி எனப் பெயரிட்டிருக்க வேண்டும். அதன் வழி பின்னர்

அவர்கள் குடியேறிய பகுதியை ஆரியர்வர்த்தம் என்றனர் போலும். ஐரோப்பிய மொழிக் குடும்பங்களைச் சார்ந்த ஈப்ரு, இலத்தீன், தமிழ்—போன்ற மொழிகளின் சாயலைக் கொண்டு, செப்பம் பெற்றிருக்க வேண்டும். செப்பம் பெற்ற பின் சமற்கிருத மென்றனர். அதனாற்றான், இம்மொழி ஆளுகையுள்ள ஒரு சிறு நிலப்பகுதிகூட இல்லாது போயிற்று. எனவே, செப்பமுறாத மொழி—திருந்தாதமொழி ஆரியம் எனவும், செப்பமுற்ற—திருந்திய மொழி சமற்கிருதமெனவும் சொல்லாமலே பெறப்படும்.

இரண்டிற்குமுள்ள அடிப்படையான ஒலி வேறுபாடுகள் :

தமிழ்மொழி இயல்பான — இயற்கையான — ஒலிப்பினைக் கொண்டது. சமற்கிருதம் அவ்வாறன்று. இராம சப்தம், கிருட்டிண சப்தம் என இருவகை ஒலிப்பு முறைகளைக் கொண்டது. இராம சப்தம் எளிமையானது ; கிருட்டிண சப்தம் கடினமானது; பெரும்பான்மையினர் இராம சப்தத்தைக் கையாளுவர் ; சிறு-பான்மையினர் கிருட்டிண சப்தத்தைக் கையாளுவர். இருவகை ஒலிப்பு முறைகளும் அறிந்தோர் மிகச் சிலரே. எப்படிக் கடிபோலி இந்தி, மைத்திலி இந்தி பேசுவோர்க்குப் புரியாதோ—எப்படி மைத்திலி இந்தி, கடிபோலி இந்தி பேசுவோர்க்குப் புரியாதோ அதே நிலை இம் மொழியாளர்கள் இடையேயுமுண்டு. ஒலிப்புச் சிறிது மாறுபட்டாலும் பொருள் மாறுபடும். அதனாற்றான் சொல் வழக்கற்று போயிற்று. வேர்ச்சொற்கள் (Root words) காணத் தாது உருபாவளி, பிரகத் உருபாவளி, எனும் நூல்களும் உண்டு. தாது உருபாவளி மிக எளிமையானது ; பிரகத் உருபாவளி கடினமானது.

தமிழ் இலக்கணம் மிக முந்தியது :

தமிழ்மொழிக்கு இலக்கண நூல் தொல்காப்பியம். இதே போன்று சமற்கிருத மொழிக்கு இலக்கண நூல் மாபாடியம். தொல்காப்பியம் முந்திய நூலா ? மாபாடியம் முந்திய நூலா ? என்று வினா எழுந்து. இவ்வினாவுக்குத் 'தொல்காப்பியமே முந்திய நூல்' என்று பெரும் பேராசிரியர் (மகா மகோபாத்தியாய) உ.வே. சுவாமிநாத(அய்ய)ர் அவர்களும், நற்றமிழர்—நாவலர்—முனைவர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களும் அறுதியிட்டு விடையிறுத்துள்ளனர். உ. வே. சாமிநாத(அய்ய)ர் 1927-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் "திருவள்ளுவர்" எனும் தலைப்பில் நிகழ்த்திய மூன்று நாள் சிறப்புச் சொற்பொழிவுகளிலும், சோமசுந்தர பாரதியார் "திருவள்ளுவர்" எனுந் தலைப்பில் தாம் எழுதிய ஆய்வு நூலிலும் தெள்ளத் தெளிவாக இதனை விளக்கி-யுள்ளனர். உ.வே. சாமிநாத(அய்ய)ரின் சொற்பொழிவு நூலாக வெளியிடப் பெற்றுள்ளது. அதனாற்றான் "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி—தமிழ்க்குடி" என்று கூறினார் புறப்பொருள் வெண்பாமாலையில் ஐயனாரிதனார்.

உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் வேறுபாடுகள் :

தமிழில் உயிர் 12; சமற்கிருதத்தில் உயிர் 15; தமிழில்

உள்ள பன்னிரண்டு உயிர்களுள் எ, ஒ ஆகிய ஈருயிர்கள் சமற்கிருதத்தில் இல்லை. ஏனைய 10 உயிர்கள் மட்டுமே உண்டு. இவற்றோடு ரு, ரூ, லு, அம், அஹ ஆகிய 5 உயிர்கள் இணைந்து சமற்கிருதத்தில் உயிர் 15 ஆகிறது. சமற்கிருத உயிர் ரு, ரூ, லு ஆகியவை தமிழில் உயிர் மெய்கள். அம், அஹ (அக) ஆகிய உயிர்கள் தமிழில் ஈரெழுத்து ஒரு மொழிகள்.

தமிழில் மெய் 18. சமற்கிருதத்தில் மெய் 35. தமிழிலுள்ள பதினெட்டு மெய்களுள் ழ், ற், ன் ஆகிய மூன்று மெய்கள் சமற்கிருதத்தில் இல்லை. ஏனைய 15 மெய்கள் மட்டுமே உண்டு. இவற்றோடு ஜ, ச', ஷ, ஸ, ஹ, க்ஷ ஆகிய ஆறு மெய்கள் இணைகின்றன. க, ட, த, ப ஆகிய மெய்கள் ஒவ்வொன்றும் 4 வர்க்கங்கள் (ஒலிகள்) பெறுகின்றன (4×4=16). ச, ஜ, ஆகிய மெய்கள் ஒவ்வொன்றும் இரண்டு வர்க்கங்கள் (ஒலிகள்) பெறுகின்றன; (2×2=4). ங, ஞ, ண, ந, ம, ய, ர, ல, வ, ச', ஷ, ஸ, ஹ, க்ஷ, ள ஆகிய மெய்கள் ஒவ்வொன்றும் ஒரு வர்க்கம் (ஒலி) பெறுகின்றன (15). ஆக, சமற்கிருதத்தில் மெய்கள் 35. வர்க்க முறை தமிழில் இல்லை. ஓரொலிதான். தமிழில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி உண்டு. சமற்கிருதத்தில் மெய்யெழுத்துகளுககுப் புள்ளி இல்லை. சமற்கிருத மெய் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ ஆகிய மெய்கள் தமிழில் இல்லை. இந்த ஒன்றுதான் வேறுபாடு. ச' மெய் தமிழில் உயிர்மெய். தமிழில் மெய் மொழிக்கு முதலில் வாரா. ஆனால் சமற்கிருதத்தில் மெய் மொழிக்கு முதலில் வரும்.

தமிழில் உயிர்மெய், உயிர் 12×மெய் 18 உறழ 216. இம் முறையில், சமற்கிருதத்தில் உயிர்மெய், உயிர் 15×மெய் 35 உறழுமாயின் 525 ஆகும். ஆனால் 452; ரு உயிர் ர, ல, ள ஆகிய மெய்களுடன் உறழ்தல் இல்லை (3). ரூ, லு ஆகிய ஈருயிர்கள் மெய்யுடன் உறழ்தல் இல்லை (2×35=70). எனவே, 525—73 452. தமிழ்போல், எல்லா உயிர்களும், எல்லா மெய்களும் சமற்கிருதத்தில் உறழ்தல் இல்லை என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இஃதன்றி கூட்டொலி 52. இஃது தமிழில் இல்லை.

தமிழில் உள்ள ஆய்தம் சமற்கிருதத்தில் இல்லை. தமிழில் உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆக 247 ஒலிகள். சமற்கிருதத்தில் உயிர் 15, மெய் 35, உயிர்மெய் 452, கூட்டொலி 52 ஆக, 554 ஒலிகள். எனவே, ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ ஆகிய அய்ந்து மெய்யொலிகள்தாம் சமற்கிருதத்துக்குரியவை. † மற்றைய உயிர்மெய்யொலிகள் தமிழிலிருந்து இரவல் பெறப்பட்டவை என்பது சொல்லாமலே புலப்படும். அதனாற்றான் க, ட, த, ப ஆகிய 4 மெய்கள் ஒவ்வொன்றுக்கும் 4 வர்க்கங்களும் (ஒலிகளும்) ச மெய்க்கு 2 வர்க்கங்களும் (ஒலிகளும்) சமைத்தனர். இஃது இவை தமிழிலிருந்து பெறப்பட்ட உண்மையை மறைப்பதற்காகச் செய்து கொள்ளப்பெற்ற ஏற்பாடு. (தொடரும்)

† இவ்வைந்தும் கூட வட திராவிடமாகிய பிராகிருதத்திலிருந்து சமசுக்கிருதம் கடன் வாங்கியவை. இதழாசிரியர்.

கிளி : மாந்தர் மொழியைக் கற்றால், வாழ்வு கிடைக்குமென்று ஏமாறி, எங்களினத்தாரில் சிலர், மானமுள்ள எங்களைப் போன்றவர்களின் அறிவுரைகளையும் கேட்காமல் போய், அவர்கள் மொழியைக் கற்றனர்; அவர்கள் பிறமொழிப் பேசும் எங்களினத்தினர் சிலரை அடிமைகளாக வைத்துக் கொண்டனர். அது மட்டுமா? கிளிக்கணியம் சோதிடம் (கிளி சோதிடம்) என்றொரு கலையைப் பழக்கி எங்களால் பிழைப்பும் நடத்துகிறார்கள். இப்போது அந்த அடிமைக் கிளிகள் எங்கள் மொழியில் பேச முடியாமல், எங்கள் மொழியையும் மறந்து, பழக்க வழக்கங்கள் யாவையும் துறந்து, கூட்டுக்குள் அடிமைகளாய் அடைபட்டுக் கிடக்கின்றன. மாந்தர் மொழியைக் கற்றதால்தான் அக்கிளிகள் அடிமைகளாகக் கிடக்கின்றன.

கழுகு : மாந்தர்களுடைய மொழியைக் கற்றதனால்தான் அடிமையானார்களென்று எப்படிக் கூற முடியும்?

கிளி : என்ன மன்னா. இப்படிச் சொல்லுகிறீர்கள்? மாந்தர் அவர்களுடைய மொழியைத் திணிக்கும்போது மறுத்திருந்தால் இன்று அவர்களிடம் அடிமைகளாக அவர்கள் இருக்கமாட்டார்கள் அல்லவா? அவர்களுடைய மொழியைக் கற்றதனால்தானே எங்களை விரட்டிப் பிடித்துக் கொண்டுபோய் கூட்டுக்குள் போட்டு அடிமைப்படுத்துகிறார்கள். அவர்கள் மொழியைப் பேசாமல் இருந்திருந்தால் எங்களைப் பிடிக்க மாட்டார்கள் அல்லவா! அவர்கள் மொழியைப் பேசினால் அவர்களுக்கு அடிமையாகத்தானே இருக்க வேண்டும்!

கழுகு : என்ன கிளியே! வேளா வேளைக்குப் பாலுஞ்சோறும் தருகின்றனர், மாந்தர். பட்டினி போடாமல் பழமும் பருப்பும் தருகிறார்கள். இந்த வாழ்க்கை கவலையற்ற வாழ்க்கையல்லவா?

கிளி : மாந்தர்கள் எதைத் தந்து என்ன செய்ய? வான்வெளியில் பறக்கவிடாமல் அடிமைக் கிளிகளின் சிறகுகளை நறுக்கிவிட்டார்கள். கால்களுக்கு விலங்கு மாட்டிவிட்டார்கள் என் இனத்தாரைக் கண்டு அளவளாவ முடியவில்லை. இப்போது அவர்கள் கிளிமொழியை மறந்து போனார்கள், என் இனத்தாரிடம் பேச தாய்மொழியே தெரியாமல் போயிற்று. மற்ற இனக் கிளிகள் அவர்களைக் கண்டால் கொத்தும். "அடிமைப் பயலே அருகில் வராதே. வயிற்றைக் கழுவ மாந்தர் மொழியைக் கற்றுக்கொண்டாய்! சீ! மானங்

கெட்டதுவே உனக்கேது இனி உரிமை வாழ்வு? தன் மொழியை மறந்து பிறர் மொழியைப் போற்றும் உன்னை உயிரோடு வைப்பதே தவறு என்று விரட்டி விரட்டிக் கொத்துகின்றன. இனத்தோடு சேர முடியாது.

கழுகு : பலமொழிகளைக் கற்றுக்கொண்டால் நல்லதுதானே!

கிளி : நல்லதுதான். அதை உரிமையத்தோடு (சுதந்திர மாக) கற்றால் தப்பில்லை. பிறர்மொழி தேவையானதுகள் கற்றுக் கொள்ளட்டும். கட்டாயப்படுத்தி விருப்பத்துக்கு மாறாக, கற்கத் திணிப்பது எதற்காக? அடிமைப்படுத்தத்தானே! கேளுங்கள் மன்னா! நாங்கள் விதைகளை வேகவைக்காமல் சாப்பிடுவோம். அவர்கள் சாரங்களையெல்லாம் போக்கிச் சாப்பிடுவதால் அவர்களுக்கு மாலைக் கண் வருகிறது. இரவில் கண் பார்வை இருக்காது. வெந்ததைச் சாப்பிட அடிமை கிளிளுக்கும் கொடுக்கிறார்கள். கண் தெரியாமல் போகவா? நாங்கள் மரபுரிமையோடு நாடு முழுவதும் பறப்போம். காட்டில் விளையும் இயற்கை உணவை உண்போம். எங்கள் இனத்தாரை அவர் மொழியைக் கற்கச் சொல்வது மட்டுமன்று மன்னா! கோதுமை அப்பத்தை (ரொட்டி) அல்லவா உண்ணச் சொல்லி அடிக்கிறார்கள்!

கழுகு : கிளியே! அஃது இருக்கட்டும், அஃதாவது நீங்களெல்லாரும் கன்னியாகுமரியில் இருந்து இமயமலை வரைக்கும் போகிறீர்கள், அல்லவா?

கிளி : ஆமாம், போகிறோம்.

கழுகு : அப்படியானால் வடநாட்டில் உள்ள பறவைகளோடு பேச ஒரு பொதுமொழி வேண்டுந்தானே!

கிளி : வடநாட்டுப் பறவைகளோடு சேர்ந்து வாழ நாங்கள் விரும்பினால்தானே! வடபுலத்துப் பறவைகள் வருகின்றன அவை என்ன பொது மொழியையா பேசுகின்றன? அவற்றினுடைய மொழியைப் பேசித் தானே தென்னகம் முழுவதும் சுற்றி விட்டுப் போகின்றன. அவையெல்லாம் ஒரு பொதுமொழி வேண்டுமென்று கேட்கவில்லையே.

கழுகு : சரி சரி நீ ஒரு முரண்உரை (விதண்டாவாதம்) வழக்கன். போய் அமர்ந்து கொள். நான் சொல்வதைக் கேள், போ. (தொடரும்)

Scanned with CamScanner

இம்மாதச் சிறப்பு மடல்

அரசியலிலிருந்து விலகி நில்லுங்கள்!

பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நலம். தங்கள் நலம் காண வருகிறது இம்மடல்.

பாவலர் கடலூர் மணிமாறன் அவர்கள் முனைவர் பட்டம் பெற்றமை மகிழ்ச்சிக்குரியது. ''பாரதிதாசன்-பெருஞ்சித்திரனார் ஓர் ஒப்பீடு'' என்ற அவரது ஆய்வுப் பொருள், இனைறைவத் தமிழர்களுக்குக் காலத்தாற் செய்துள்ள நன்றி எனலாம்.

''பாரதிதாசனார்-பெருஞ்சித்திரனார்...'' என்று அமைந்திருந்தால் ஒப்பீட்டு இசைவு இன்னும் கூடியிருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மணிமாறன் தம் ஆய்வேட்டில், பாவேந்தரை விடவும் பாவலரேறை அதிகமாகப் பாராட்டியிருப்பார் போல் தெரிகிறது. பாவேந்தரை விடவும் பாவலரேறு சிறப்புப் பெறுவதென்பது இயல்பான வளர்ச்சியே எனலாம்.

இத்தகு சிறப்பைத் தாங்கள் மென்மேலும் பெறவேண்டும் என்று தனித்தமிழன்பர்கள் விரும்புகின்றனர். இந்த விழைவின் காரணமாக, என்னுடைய கருத்துகளை என் வேண்டுதல்களாகத் தங்கள் கனிவான பார்வைக்குப் பணிவாக வைக்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தால், தமிழ்வழி, இவ்வுலகிற்கு இன்றொரு 'சேக்சுபியர்' கிடைத்திருக்கக்கூடும் என்று அண்ணாவின் வாழ்வு நாள்களிலேயே என் போன்றவர்கள் கருதிப் பார்த்ததுண்டு. ஒரு காலக்கட்டத்தில் பாவேந்தரவர்கள் திரைப்படத் தொழில்மீது தம் பார்வையைச் செலுத்தாது இருந்திருப்பாராயின், தமிழ்த் தாய்க்கு மேலும் பல அணிமணிகள் வாய்த்திருக்கும். அதேபோலத்தான் பாவலரேறு அவர்களையும் எண்ணிப் பார்க்கிறோம்.

அரசியலில் தாங்கள் நேரிடையாக ஈடுபடாவிட்டாலும் அந்தச் சாய்க்கடையை நுகர்கின்ற செயலைச் செய்து வருகின்றீர்கள். தங்கள் அரசியல் கட்டுரைகள் 'தென்மொழி'க்கு மடல் விடுப்பவர்தம் பாராட்டுகளைப் பெறலாம். ஆனால், அரசியலாளர்களுக்கே யுரிய வெம்மை உணர்வைத் தாங்கள் வெளிப்படுத்துகின்ற முறை, தனித்தமிழன்பர்கள் பலரைத் தங்களிடமிருந்து விலகியிருக்குமாறு செய்துவிடுகிறதே? இதனைத் தாங்கள் உணரவில்லையா?

திராவிட இயக்கக் கட்சிகள் மூன்றிலும் தமிழுணர்வுடையோர் எவரும் இருக்கமாட்டார்கள் என்று முடிவு செய்து கொண்டீர்களா? எல்லாக் கட்சித்தலைவர்களையும் ஒருசேரத் தாக்குகிறீர்களே?

அவ்வக்கட்சியில் சாய்கால் உள்ள தமிழன்பர்களின் வெறுப்பை நீங்கள் ஏன் தேடிக்கொள்ளவேண்டும்? தமிழ் உள்ளங்களை ஒருங்கிணைக்கும் வண்ணம் உங்கள் செயல்பாடுகள் அமைதல் சிறப்பாகுமன்றோ? அருள் கூர்ந்து எண்ணிப் பாருங்கள்.

தமிழுணர்வுக் கனலைக் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது **'தென்மொழி'**. தென்மொழி இதழ் தொடங்கப்பெற்ற காலக்கட்டத்தில், தனித்தமிழன்பர்கள் ஓர் இரண்டாயிரம் பேர் இத் தமிழகத்தில் இருந்திருப்பார்கள் என்று வைத்துக்கொண்டால், அந்த எண்ணிக்கை தற்போது எவ்வளவு கூடியிருக்கும்? ஓர் ஆயிரமாவது கூடியிருக்குமா என்பதும் ஐயப்பாட்டுக்கே உரியது! தங்களுடைய தமிழ் நடையால் ஈர்க்கப்படும் பலர், அவ்வப்போது தாங்கள் உமிழும் வெம்மை உணர்வைத் தாங்கமாட்டாமல் தங்களைவிட்டு விலகிச் சென்று விடுகின்றனர் என்பது தாங்கள் அறியாத ஒன்று அன்றே? தங்களுடைய நோக்கத்துக்கே எதிர்மறையாகத் தங்கள் எழுத்துகளைத் தாங்கள் கையாளலாமா? அருள் கூர்ந்து கருதிப் பாருங்கள்.

சேரமான் இளவல் அரசியலில் ஒரு கால் - இலக்கியத்தில் ஒரு கால் என்று செயல்பட்டிருந்தால் **'சிலப்பதிகாரம்'** நமக்குக் கிடைத்திருக்குமா? பாவலர் கண்ணதாசனின் அரசியல் ஈடுபாடு அவரைப் பாழ்படுத்தியதைக் கண்கூடாகக் கண்டோமே?

இன்று ஓர் அரசியல் தலைவரைத் தாழ்த்தி எழுதுவீர்கள். நாளையே அவரைப் புகழ்ந்து பாடுவீர்கள். நம்பிக்கைக்குரியவராக ஒருவரை இன்று சுட்டிக் காண்பீர்கள். நம்பகத் தன்மை சிறிதும் இல்லாதவர் அவர் என்று நாளையோ, நாளை மறுநாளோ எழுதுவீர்கள். நீங்கள் இன்னமும் குழந்தைத்தனம் மாறாமலிருக்கிறீர்கள் என்பதை நானறிவேன். அதனைக் குறையாக நான் கூறவில்லை. பாவலரேறுவுக்கு அதுவும் ஒரு நிறையே என்பேன்.

பாவலரய்யா! அரசியலாளர்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருப்பர். இப்படி மாறுவதுங்கூட ஓர் அரசியலில் திறன் என்பர். இந்த அரசியலில் தங்கள் பொன்னான பொழுதுகளை ஏன் வீணாக்க வேண்டும்? 'ஆக்கம் கருதி முதல் இழக்கும்' செயற்பாடுகள் தேவைதானா?

தண்தமிழைத் தங்களைப்போல் ஆளுகின்ற இன்னொருவர் இன்றுள தமிழகத்தில் யாருளர்? தண்டமிழில் நாளும் தோய்ந்து, தண்ணுணர்வுகளையே வெளிப்படுத்துங்கள். தமிழுள்ளங்கள் எங்கிருந்தாலும் தங்களை நாடி வரும்; தங்கள் புகழைப் பாடி மகிழும். தமிழ் நெஞ்சங்களை ஒருங்கிணைப்பதுதான் இன்றையத் தேவை; இன்றியமையாத் தேவை.

Scanned with CamScanner

தங்களின் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'யை ஆண்டுகள் பலவாக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். பாவாணர் மேற்கொண்ட முயற்சிகள் பல முடிவுறு நிலையில் தேக்கம் கண்டுள்ளன. தாங்களும், மதுரைப் புலவர் இளங்குமரனார் போன்றவர்களும் பாவாணர் முயற்சிகளை நிறைவு செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவ் வின்றியமையாப் பணிகளில் கருத்துச் செலுத்துங்கள்.

தமிழர்களிடம் உள்ள தமிழுணர்வு வறுமைக் கோட்டுக்கும் கீழே அமிழ்ந்து கிடக்கிறது. அமிழ்ந்து கிடக்கும் தமிழுணர்வைத் தட்டி எழுப்பி, நாளும் வளர்க்கவும் மேம்படுத்தவும் என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து எண்ணிப் பார்த்து, தாங்கள் எண்ணிய எண்ணியாங்கு செயலில் இறங்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

'வடமொழிதான் தென்மொழியை வாழவைத்தது' என்றும், 'சமற்கிருதம் போல் செந்தமிழும் வழக்கிறந்து ஒதுங்கிவிட வேண்டு மென்றும், சமற்கிருத மயமாகவும் ஆங்கில மயமாகவும் சிதைவுறப் பெறுகின்ற ஒருவகைக் கலப்புத் தமிழே தமிழர்களின் புழக்கத்தில் நிலைகொள்ள வேண்டுமென்றும், ஒரு கூட்டம் 'தினமணி' போன்ற இதழ்களில் எழுத முற்பட்டுள்ளது. "தனித்தியங்கும் தன்மை தமிழனுக்கு உண்டு - தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு" என்ற மெய்ம்மை நிலையை மூடி மறைக்க முயலும் இந்தக் கூட்டத்தைத் தங்களைப் போன்றவர்கள் ஒருங்கிணைந்து எதிர் கொள்ள வேண்டாமா? தமிழையே பழிக்கின்ற அவர்கள், தாமும் தமிழர்களே என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்றார்கள். 'தமிழண்ணல்' போன்ற தமிழ்வாணர்களும் அந்த 'வடமொழி வாணர்'களுக்குத் துணை போகின்றனர்.

தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஓர் இக்கட்டான நிலைதான் தற் போது ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், தமிழார்வலர்கள் பலரும் ஒருங்கிணையப் பாடாற்றுங்கள். தமிழ்ப்பணியை முடுக்கிவிடுங்கள். "நந்தமிழீர், தமிழொன்றால் நாமிணைந்தால் உமியன்றோ பெரும் பகையும?" என்பீர்கள். ஊழையும் உப்பக்கம் காணவல்ல உழைப்பு நமக்கு இப்போது தேவையாகியுள்ளது.

தங்கள் அன்புள்ள,

க. சி. அகமுடைநம்பி, மதுரை

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்

நமக்கு விடிவெள்ளி
பெருஞ்சித்திரனாரே!

—பாவலர். தமிழ்க்குமரன்

மொழிவாழ இனம்வாழும்; நாடு வாழும்;
    மொழிதாழின் இனந்தாழும்; நாடு தாழும்!
விழிபோல மொழிபேணும் வீரர்கள் என்றே
    வீறுகொண்டே எழுந்தார்பா வலரில்ஏறு!
அழியாத உணர்வோடே மொழிபு ரக்கும்
    ஆன்றமைந்த சான்றோராம் அய்யா! வெற்றிச்
சுழிபோட்டே இனம்நாட்டை மீட்ப தற்குத்
    தூங்காமல் தொண்டாற்று கின்றார் நாளும்!

தாய்மொழியாம் தமிழென்ற அமுதி ருக்கத்
    தேர்ந்துபிற மொழிகளினைத் திருவி ழந்து
சேய்த்தமிழர் அடிமைசெய்தே இழியக் கண்டு
    சிந்தைமிக நொந்துபெருஞ் சித்தி ரர்தாம்
தேய்ந்துவரும் தமிழினத்தை மீட்ப தற்குத்
    தேர்ந்தே'தென் மொழி'யைத்தான் களம் அமைத்துத்
தூய்தமிழில் பாட்டெழுதி உரைநி கழ்த்தித்
    தூங்குகின்ற தமிழர்விழிப் புறவே செய்தார்!

'தென்மொழி'யைத் 'தமிழ்நில'த்தை மீட்ப தற்குத்
    தீரம்வி ளைத்திவரே களம்பு குந்தார்!
முன்புகழைக் காத்துநம துரிமை பேணி
    முகிழ்த்தெழுந்தார் விடிவெள்ளி யாக ஈண்டு!
பொன்றாத உணர்வோடு களம்பு குந்த
    பொங்குசின வேங்கைபெருஞ் சித்தி ரர்க்கு
நின்றதுணைத் தமிழர்கள் நிமிர வேண்டும்,
    நீளடிமை செய்வதனை விட்டொ ழித்தே!

சிட்டுகளாம் தமிழ்மழலை கட்கு நல்ல
    சிந்தனையை வளர்த்துணர்வு கொள்ளச் செய்வார்!
மொட்டுகளாம் குழந்தைகட்டு மலரும் போதே
    மொழியுணர்வை இனவுணர்வை ஊட்டு கின்றார்!
கட்டியிவர் நமதுரிமை பாது காத்துக்
    களம்புகுந்தே ஆர்க்கின்றார் நமமை மீட்க!
சுட்டஇவர் நாம்பெற்ற பெரும்பே றென்பேன்!
    சுவடழிந்து போகாமல் சூழ்ந்து யர்வோம்!

ஓரினத்தை அழித்தொழிக்க வேண்டு மானால்
    ஓர்ந்தவர்கள் பேசும்தாய் மொழிசி தைப்பீர்!
நீரிதனைச் செயல்படுத்தித் திரைம றைவில்
    நிறையழித்தே அவர்மொழியை நீக்கி வைக்கப்

பாரிலந்த இனம்தாழ்ந்து கெட்டுப் பட்டுப்
படிப்படியாய் அந்த இனம் அழியும் என்றார்!
பேரினமாம் தமிழினத்தை அழிப்ப தற்கே
பீடில்லா இந்தியினைப் புகுத்து கின்றார்!

நயனில்லார் வடபுலத்தார் செய்யும் சூழ்ச்சி
நாமறியோம்! வஞ்சகத்தில் நரியை விஞ்சி
வியன்தமிழை அழித்திடவே பார்க்கின் றார்கள்!
வீறுகொண்டே எழுகதமி ழினமே என்று
வயைப்படநாம் 'தென்மொழி'யில் எழுது கின்றார்!
வாய்க்கின்ற போதெல்லாம் உரை நிகழ்த்தி
முயற்கொம்பா விடுதலையும்? இல்லை நீங்கள்
முனைப்பாக இருப்பீரேல் பெறலாம் என்றார்!

தொழுதடிமை செய்கின்ற தமிழ ருக்குத்
தோளுரத்தைத் தருவதிவர் சிந்த னைகள்!
கழுத்துக்குக் கத்திவந்த போதும், தூக்குக்
கயிற்றினையே முத்தமிட நேர்ந்திட் டாலும்
விழுந்ததமிழ்ப் பேரரசை மீண்டும் தோற்றி
விடுவிப்பேன் நாட்டையென்று சூளுரைத்த
பழுத்தபழம்! பண்பாட்டுப் பயிர் விளைக்கும்
பாவலரில் ஏறுவைப்பின் பற்று வீரே!

நலிந்ததமிழ் மக்களின்நல் வாழ்வுக் காக
நாட்டுவிடு தலைக்குழைக்கும் 'தென்மொ ழி'க்கு
வலிவூட்டிப் பொலிவூட்டி வாழ்வு பெற்று
வல்லடிமை நீங்கித்தலை நிமிரு வீரே!
பலியாடா நீங்களெல்லாம் பகரு வீரே?
பாராண்ட பேரினமாம் தமிழ ரன்றோ!
புலிகளென்ப தைப்பகைவர் தமக்கு ணர்த்திப்
பொன்னாட்டை மீட்காகத் தழுபபேற் பீரே!

சிந்தனையில் சீழ்ப்பிடித்த எழுத்தா ளர்கள்
தென்னாட்டில் மலிந்தடிமை நோய்கொ டுக்க
வந்துயிர்த்த மாற்றலரைத் தொழுதுயிர்த்து
வாழோம்யாம் என்றெழுந்த தமிழன் வீறு!
சந்துமுனைச் சிந்திசைத்துத் தருக்கி நின்ற
தமிழ்ப்பகையின் இடுப்பொடித்துத் தாழ்ந்தி ருந்து
வெந்துயரப் படுந்தமிழர் விடுத லைக்கு
வித்திட்டார் பெருஞ்சித்திர னாரும் கண்டீர்!

தமிழ்மொழிக்கே அரணாகும் அவர்எ ழுத்து!
தமிழர்க்குத் தோளுரத்தை அதுகொ டுக்கும்!
தமிழ்ப்பகைக்கு வேட்டெஃகம் அவர்கீ ருத்து!
தகாதகுலக் களைம்பழிக்கும் கைத்து முக்கில்

அமிழாத உணர்ச்சிஎரி மலைவெ டிக்கும்!
அந்தமிழர் உரிமைக்கே இடிமு ழக்கும்!
உமியாக ஒதுக்கிவைத்தார் நமைவ டக்கர்
உணர்வுபெற்றே எழுகவென்று படைந டத்தும்!

ஏடென்று பலநூறு வந்த போதும்
ஏறுநடை நமக்களித்த 'தென்மொ ழி'க்கே
ஏடென்ற பெயர்பொருந்தும் என்று ரைப்பேன்.
எங்கும்எவ் விடத்தினிலும் நிமிர்ந்து நின்று,
பாடெல்லாம் வீண் பாடாய்ப் பல்லிளித்துப்
பரத்தைமைத் தொழில்புரியும் சிலஏ ட்டாலே
நாடின்றைக் கடிமையிலே உழலக் கண்டோம்
நமக்குவிடி வெள்ளிபெருஞ் சித்திர னரே!

மிகைப்படுத்திக் கூறுவதாய் எண்ண வேண்டா.
மெய்யிதுவே என்பதனைக் காலம் சொல்லும்!
பகைவர்க்கே இடமளித்து வாழ்வி ழந்த
பைந்தமிழர் உரிமைக்குக் குரலகொ டுத்து
நகைப்பிற்கே இடமாகிப் போன வர்கள்
நாடிநரம் பில்வீர முறுக்கை ஏற்றி
வகைகெட்ட தமிழினத்தை மீட்ப தற்கு
வந்ததின்று குகைவிட்டோர் புலியும் காண்க!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு: பதிவஞ்சல் செலவு தனி
தென்மொழி, சென்னை-5.

Scanned with CamScanner

O : 1481 : அண்ணலே, வணக்கம்; தங்களோடு வ.உ.சி. மாவட்டம் திருச்செந்தூரில் தங்கிய உள்ளம் மீளவில்லை; திருப்புகழ் என்று கருதுகிறேன், 'வள்ளித் தேனிற்கு, வாயூறி நின்ற முருகன்' என்ற வரி உள்ளது. அந்த முருகனைப் போலத் தங்களின் அறிவூறும் அன்பூறும் சொல்லுக்கு வாயூறிக் கிடந்த தமிழ் நெஞ்சங்களில் யானும் ஒருவன் அன்றோ ?

'அறம்' சார்ந்த வாழ்வு கடினமானதே; தங்களுடன் தொடர்ந்தியங்குவது அவ்வளவு எளிதன்று; ஏனெனில், 'புரட்சிகர வாழ்க்கை' என்பது பலருக்கு இளமைக் கனவாகி விட்டது. முதுமை வரவரக் குடும்பச் சுழலில் தேங்கிவிடுகின்றனர்; அத்தகையவரில் யான் அகப்படாமல் 'தடுத்தாட்கொள்ள' விழைகின்ற தங்கள் தகைமைக்கு யான் என்னாற்ற வியலும் ?

தினமணி கூட காவிரிச் சிக்கலில் ஊன்றி நின்று எழுதுகின்றது —செயலலிதா காப்பு பெரிதென்று போலும்! ஆனால், தமிழினத் தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் ஒருமைப்பாடு மந்திரத்தைப் பேராயக்கட்சித் தலைமைகள் எதிர்க்கிறபோது கூட ஆதரித்து நிற்பதைக் காண முடிகிறது; ஏன் ?

விலையேற்றம், அருநாடகத் தமிழர் வெளியேற்றம் எல்லாம் 'வெறும் அரசியல் பதவி' நலன்களுக்குப் பலியாகி விடுகின்றன; தமிழினத்தின் விடுவிப்புக்கு உதவுவதாக இல்லை;

தன்மானத் தலைமைகள், "நூறிழந்து ஒன்றுபெறும்" பெருமையுடையன. அந்த ஒன்று உரிமை; மான மன்று; அது பதவி நலம்;

தமிழகம் அமைதி காத்து நிற்கிறது— ஆம், எந்த இழப்பிற்கும் தமிழகம் கவலைப்படுவதில்லை: அதனை அப்படி உருவேற்றி உரிமையுணர்ச்சி மரத்துப் போகச் செய்துள்ளனர்: அண்ணலே, தாங்கள் சொல்லியபடி 'தமிழர்கள் விரட்டப்பட்டு'ப் பல திசைகளிலிருந்தும் தமிழகம் வந்து, அங்கிருந்தும் விரட்டப்பட்டுக் 'கடலுள் மாய்ந்து' தற்கொலை செய்து கொள்ளும் அவலம் அடைவார்களோ என்றஞ்சுகின்றேன்;

தமிழரிடையே உள்ள 'இறையுணர்வு' தமிழ் சார்ந்தியங்கும் படி மீட்டுருவாக்கம் செய்வதும் வேண்டுமென்றே கருதுகின்றேன். இல்லையேல், ஆரிய — பார்ப்பனிய வழியில் போய், தமிழர் முகவரியிழந்து போக நேரிடும்;

பொருளியல்-பொருள் முதல் கொள்கை பற்றிய உறுதிப்பாடு காணும் வரை, மக்களை அசையாமல் கட்டி வைக்க வியலாது; மன ஓர்மை, புலம்பன், (ஆன்மா) குறித்த ஆய்வுக்குள் நுழைவது ஒருபால் கிடக்கட்டும்; அவனை அவனுடைய பண்பாட்டுத் தளத்திலிருந்து வளர்த்துயர்த்த நாம் ஒரு வழிகாணல் வேண்டும்! அதற்கான தமிழ் இறைமை உணர்வை ஆதரித்து நிற்பதும் வேண்டும்;

அரசியல், மற்றுமுள பல துறை அறிவும் கொண்ட அன்பர்களைத் தெரிவு செய்ய முடியுமா ? அப்படித் தெரிவு செய்தாலும் அவர்கள் உ.த.மு.க. போன்ற உழைப்பியக்கத்தில், பண்பாட்டு அமைப்பில் தொடர்ந்து செயல்படுவார்களா என்றும் சிந்தித்துப் பார்க்கிறேன்;

எனைவகையான் தேறினும், வினைவகையான் வேறுகும் மக்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம்: இதற்கு யானும் நெறிவிலக்கென்று கருதவில்லை, என்கிறபோதும் இனம் என்னும் ஏமம் உண்டென்பதால் நெஞ்சு நிறைகின்றேன்; அத்தகைய

Scanned with CamScanner

காப்புக்காக நாம் செயல் ஒன்றையே நம்புவோம். அன்புடன்
—பறம்பை அறிவன், பறம்புக்குடி.

○ : 1482 : பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு அய்யா அவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் பல.

அய்யா அவர்களிடம் சொல்லுறுதியளித்தபடி நெல்லைக் கூட்டங்களுக்கு வர இயலாது வாய்மை இழந்த இக்கட்டான சூழ்நிலைக்குத் தங்கள் மன்னிப்பை வேண்டுகிறேன்.

...அய்யா அவர்கள் நெல்லை க. பொ. மாவட்டக் கூட்டங்களில் வீரப்பொழிவு நிகழ்த்தி வெற்றிகரமாகத் திரும்பியிருப்பீர்கள் என நான் நன்கறிவேன்.

"பெரியாருக்குப் பின் இத் தாழ்ந்த தமிழகத்துக்குத் தாங்கள்தாம் விடிவெள்ளி" என்று எங்களைப் போன்றவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம். "தமிழகத்தின் வால்டேர்" தாங்களே; மிகையில்லை. விடுதலைக்கு இன்னும் நாம் நிறைய விலை கொடுத்தாக வேண்டும்! வஞ்சகம் வீழும்! இரண்டகம் சாகும்! உண்மை வெல்லும்! அன்பன்,
புலவர். தி. மு. அரசமாணிக்கம், ஈரோடை.

○ : 1483 : பெருமதிப்பிற்குரிய பாவலர் அய்யா, வணக்கம். தாங்கள் நலம் பற்றிக் கடலூர் மணிமாறன் அவர்களிடம் சென்ற கிழமை சந்திக்கும் பொழுது கேட்டேன். தங்களுக்கு வரும் மடல்கள் தணிக்கை செய்யப்படுவதாகவும், மிகவும் இக்கட்டான சூழலில் இருப்பதாகவும் எடுத்துரைத்தார். மிகவும் உள்ளம் வருந்தியது. இனம், மொழி, விடுதலைக்குத் தொடர்ந்து 35 ஆண்டுகளாக ஒற்றை மாந்தராய் குரல் கொடுத்து வருகின்றீர்கள். உண்மைத்தமிழர்கள் அடையாளம் கண்டு கொண்டு ஒல்லும் வகையால் உறுதுணையாக இருக்கலாம். நானோ! ஆசிரியன் தானே!

இளைஞர்கள் எதிர்காலத்தில் தமிழ் உணர்வோடு விளங்க, தங்கள் தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்களை படித்தால்பயன் உண்டு என்று கருதி மாணவர்களுக்கு என்னால் முடிந்தவரை தமிழ்ச்சிட்டு இதழ்களை வாங்கிக் கொடுக்கலாம் என முடிவு செய்துள்ளேன்.

தங்கள் ஒப்பறிய தமிழ்ப் பணிக்குத் துணையாக நிற்க விரும்பும், —அன்பன்,
புலவர் ப. ச. தமிழ்நம்பி, பூதமங்கலச்சேரி, (திருவாரூர்).

○ : 1484 : புலமைசால் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தூய்மைமிகும் தமிழ் இலக்கியப் பணி, இமய இருக்கையிட்டு நிலாப் பூச்செண்டைக் கையில் கொடுத்துப் பாராட்டத் தக்கது.
—புலவர். தமிழறிவன், இலக். இ. சென்னை-14.

○ : 1485 : பேரன்புப் பெருந்தகை பாவலரேறு அய்யா அவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் பல.

"பாவணர் நூல்களில் பழமொழிகள்" என்னும் சிறு நூலைப் பற்றித் தென்மொழியில் (சுவடி. 26 — ஓலை 3) வந்த மதிப்புரையைக் கண்டுக் களிப்புற்றேன். தாங்கள் சீராட்டிப் பாராட்டி வளர்த்த இந்தக் குழந்தைக்குச் சிறப்புத் தந்தது என் வாழ்நாளில் மறக்க முடியாத பசுமையான இன்ப நினைவு. நூலில் அச்சுப் பிழைகள் நேர்ந்து விட்டன என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்குத் தங்கள் அன்புக் குழந்தை, —சி.பு. மணி, வெங்காளூர்-21.

○ : 1486 : மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு ஒரு தமிழன் எழுதிக் கொள்வது. தங்களது

(தொடர்ச்சி உள்ளே 8-ஆம் பக்கம்)